Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆவணி 07 புதன்கிழமை (24.08.2011) பக்கங்கள் 16 ஓசை – 329

ராம் கோ MADRAS CEMENTS LTD RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டும்
100 வீத சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து
(C7848)



சென்னைக்கு 372 ஆவது பிறந்தநாள் (12)



நீண்ட தூரம் பறக்கவும் முடியும் (11)



வெளிநாட்டுத் தரத்தில் சுற்றுலா மையங்கள் (08)



30 வருடங்களுக்கு பின்னர் நடந்து வந்து... (02)


# நாவாந்துறை சம்பவம் நூறு பேருக்கு மேல் கைது

## விடுதலை கோரி நீதிமன்றை முற்றுகையிட்டனர் மக்கள்

☆ பெண்கள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் காயம்

☆ நாவாந்துறை பகுதியெங்கும் இராணுவம் குவிப்பு

☆ படையினரின் வாகனங்களும் நொருக்கப்பட்டன



(யாழ்ப்பாணம்)

யாழ். நகரின் நள்ளிரவு அமைதியைக் குலைத்த நாவாந்துறை தாக்குதல் சம்பவம் தற்போது நீதிமன்ற வழக்குகளாகப் பதிவுசெய்யப்பட்டிருக்கிறது.

யாழ். நாவாந்துறையில் நேற்றுமுன்தினம் இரவு பொது மக்களுக்கும் பொலிஸார் மற்றும் இராணுவத்தினருக்கும் இடையில் முளைவிட்ட சிறு முறுகல் இறுதியில் அடிதடி மோதல்களில் முடிவடைந்தது. மோதலின் இறுதியில் பொலிஸார் உட்பட பொதுமக்கள், படையினர் பலரும் காயங்களுக்குட்பட்டனர். நூற்றுக்கும் அதிகமானவர்கள் படையினரால் கைதுசெய்யப்பட்டு தற்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கெதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு பகுதியினர் பலத்த அடிகாயங்களுக்குட்பட்டிருக்கின்றனர். பலத்த காயங்களுக்குட்பட்ட 18 பேரும் ஏனைய காயம்பட்ட 88 பேரும் யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர். இவர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக யாழ். போதனா மருத்துவமனையில் மேலதிக பொலிஸார் குவிக்கப்பட்டிருக்கின்றனர். (15 ஆம் பக்கம் பார்க்க)

## தவறு செய்வோருக்கு உரிய சட்ட நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பி. கட்சியை சார்ந்தவர்களாயினும் சரி, அரச கட்சியைச் சார்ந்தவர்களாயினும் சரி குறிப்பாக சட்டத்தை மீறுபவர்கள் மீது நிச்சயம் உரிய வகையில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் தற்போது உருவாகியுள்ள கிறிஸ் மனிதர்களின் நடமாட்டத்தால் பொதுமக்களுக்கு ஏற்படும் அவலங்கள் மற்றும் எதிர்காலத்தில் களவுகள் உள்ளிட்ட சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் நேற்று அமைச்சரின் யாழ் அலுவலகத்தில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் விழிப்புக் குழுக்களை அமைப்பதனூடாக சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்த முடியுமெனவும் அதற்கு அந்தந்த கிராம சேவையாளர் ஊடாக மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## அமைதியைக் குலைக்கும் திட்டமிட்ட நடவடிக்கை



### யாழ். தளபதி ஹத்துருசிங்க

(யாழ்ப்பாணம்)

நாட்டில் சமாதானம் ஏற்பட்டு கடந்த 2 வருட காலமாக யாழ். மாவட்டத்தில் நிலவிவரும் சமாதானத்தை விரும்பாத ஒருசிலரின் திட்டமிட்ட அடாவடிச் செயலாகவே நேற்று முன்தினம் நாவாந்துறையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்ளைக் கருதவேண்டியுள்ளது என யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார். (15 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சி உறுப்பினர்கள் பதவியேற்பு நாளை யாழ்ப்பாணம் வருகிறார் பசில்

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களின் பதவியேற்பு நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளார்.

யாழ். பொதுநூலக கேட்போர் கூடத்தில் நாளை காலை 9 மணியளவில் இப்பதவியேற்பு வைபவம் இடம்பெறவிருக்கிறது. அண்மையில் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் 3 சபைகளைக் கைப்பற்றியும் பல மன்றங்களில் பிரதான எதிர்க்கட்சி அந்தஸ்தையும் பெற்று விளங்குகிறது.

## செய்தியாளர் கைது

யாழ். நீதிமன்ற வளாகத்தில் படம் எடுக்க வேண்டாம் என்ற நீதிபதியின் உத்தரவை மீறிய ஊடகவியலாளர் யாழ்ப்பாண நீதிமன்றப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

நாவாந்துறையில் தாக்குதலுக்கு இலக்கான பொதுமக்கள் சிலரை நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து அம்பியுலன்சில் ஏற்றுகையில் அதனை புகைப்படம் எடுத்தபோது இவர் கைதுசெய்யப்பட்டார். பின்னர் 500 ரூபா அபராதத்துடன் அவரை நீதிபதி விடுவித்தார்.

## மர்ம மனிதன் நடமாட்டம் நேற்று உடுப்பிட்டியில் பீதி

(யாழ்ப்பாணம்)

யாழ். உடுப்பிட்டிப் பகுதியில் நேற்றிரவு மர்ம நபர்களின் நடமாட்டத்தால் மக்கள் அலறியடித்துக் கொண்டு வீதிக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

இரவு 7.30 மணியளவில் விரைவாக வந்த வெள்ளை வானிலிருந்து இறங்கி 3 அடையாளம் தெரியாத நபர்கள் திடீரென உடுப்பிட்டி சந்திப்பகுதியில் உள்ள வீட்டினுள் புகுந்துள்ளனர்.

இதனை அவதானித்த வீட்டில் இருந்தவர்கள் அலறவே அவர்கள் உடனடியாக வானில் ஏறி அண்மையிலுள்ள இராணுவ முகாமிற்கு சென்றதாக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

இச்சம்பவத்தினால் அப்பிரதேச மக்கள் மிகவும் பயப்பீதியுடன் வீட்டினுள் முடங்கிக் கிடப்பதாக அறியவருகின்றது.

## டெங்கு: விழிப்பாக இருக்க வேண்டுகோள்

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் இந்த மாதம் அதிகரித்துள்ளது. இதுவரை 14 பேரில் இந்நோயின் தாக்கம் இனங்காணப்பட்டுள்ளது. இவர்களில் 7 பேர் யாழ். மாநகரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். சுற்றுலாப் பயணிகள் மற்றும் நல்லூர் திருவிழா போன்ற காரணங்களால் நோயின் பரம்பல் தீவிரமாகியுள்ளது.

டெங்குக் காய்ச்சல் பொதுவாக கடுமையான காய்ச்சல், தலைவலி, மூட்டு நோ, உடல் நோ என்பவற்றுடன் ஆரம்பிக்கும். இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளவும் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

# அறநெறி ஆசிரியர்களுக்கு வலுவூட்டல் செயலமர்வு





சிவத்தமிழ் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று கோவில் வீதியில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்றத்தில் நேற்று ஆரம்பமாகி இன்றும் நாளையும் நடைபெறவுள்ளது.

சின்மயா மிஷன் சைதன்யா சுவாமிகளின் தலைமையில் நடைபெற்றுவரும் இச்செயலமர்வு சின்மயா மிஷனின் யாழ்ப்பாணக் கிளை சுவாமிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஆறு திருமுருகன், இந்து நாகரிகத்துறை விரிவுரையாளர் நாச்சியார் செல்வநாயகம், கிளிநொச்சி மாவட்ட சுவாமிகள் மற்றும் சாயி மாதா ஆகியோர் வழிகாட்டலில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (எஸ்)




ஒரு மனிதர் பகல் முழுவதும் நோன்பு நோற்கிறார். இரவு முழுவதும் நபில தொழுகின்றார். ஆனால், ஜும்மாவிலும், ஜமாத் தொழுகையிலும் கலந்து கொள்வதில்லை. இவர் நரகவாதியாவார். நூல் திர்மிதி (105)

## சேவை நலன் பாராட்டு விழா

(அம்பலப்பெருமாள்)

40 ஆண்டுகளாக கல்விப் பணியாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும் துணுக்காய் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி. இராஜேஸ்வரனுக்கு சேவை நலன் பாராட்டு விழா நேற்றுக் காலை துணுக்காய் வலயக் கல்விப் பணிமனையில் நடைபெற்றது.

துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் த. மேகநாதன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப்பாளர்கள், வலயக் கல்வி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சேவை நலன் பாராட்டு உரைகளை வழங்கினர்.

இதேவேளை, துணுக்காய் வலய அதிபர்களினாலும் சேவை நலன் பாராட்டு விழாவொன்று விரைவில் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (121)

### வவுனியாவிலிருந்து

## 30 வருடங்களுக்குப் பின்னர் நல்லூருக்கு பாதயாத்திரை



(வவுனியா)

நல்லூர் கந்தன் ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழாவினை முன்னிட்டு வவுனியா வேப்பங்குளத்திலிருந்து நேற்று வேல்நடை பாத யாத்திரை நல்லூரை நோக்கிப் புறப்பட்டது.

வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் நிர்வாகி அறநெறிச் செல்வி கு.ஜெயராணி (சாமி அம்மா) தலைமையிலான பாத யாத்திரைக் குழுவினர் வேல் தாங்கியவாறு பாத யாத்திரை ஆரம்பித்தனர்.

வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து புறப்படும் பாதயாத்திரைக் குழுவினர் வவுனியா மன்னார் வீதியூடாக பயணித்து வேப்பங்குளம் சித்திவிநாயகர் ஆலயம், குருமன்காடு காளி அம்மன் ஆலயம், வைரவப் புளியங்குளம் ஆதிவிநாயகர் ஆலயம், வவுனியா கந்தசுவாமி ஆலயம் ஆகியவற்றிற்குச் சென்று பின்னர் ஏ9 வீதியூடாக தாண்டிக்குளம், புளியங்குளம், கனகராயன்குளம், மாங்குளம், கிளிநொச்சி, பரந்தன், பளை, கொடிகாம், சாவகச்சேரி ஊடாக நல்லூரை வந்தடையும்.

மேற்படி பாத யாத்திரைக் குழுவினர் தாம் பயணிக்கும் பாதையிலுள்ள இந்து ஆலயங்களில் விசேட பஜனைகளில் ஈடுபடுவர்.




### தெய்வீக இசை அரங்கு

நல்லூர் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுரசணையுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணி முதல் 8.00 மணி வரை தெய்வீக இசையரங்கு நடத்தப்பட்டு வருகிறது.

இதில் கஜவல்லி மகாவல்லி உற்சவமான 21ஆம் திருவிழா இன்று திருமதி அகன்யா அரவிந்தனின் பாட்டுக் கச்சேரியில் வயலின் - ஏ. ஜெயராமன், மிருதங்கம் - வி. ரமனா, முகர்சிங் - கே. நந்தகுமார் ஆகியோர் பக்கவாத்தியக் கலைஞர்களாக கலந்துகொள்ளவுள்ளனர்.

### ஆன்மீகச் சொற்பொழிவுகள்

நல்லூர் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு சொண்ட் சிறுவனத்தின் அனுசரணையுடன் 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடைபெற்று வரும் ஆன்மீகச் சொற்பொழிவில் இன்று புதன்கிழமை 'ஆறுமுகம்' என்னும் பொருளில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் சொற்பொழிவாற்றுவார்.

□ □ □

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ காலத்தில் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் தினமும் பிற்பகல் 3.00 மணி முதல் 6.00 மணி வரை நடத்தும் சமய சொற்பொழிவு மற்றும் கலை நிகழ்வுகளில் இன்று மந்திரங்களின் பயன் என்னும் விடயம் பற்றி இராகேதீஸன் சொற்பொழிவாற்றுவார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளில் புங்குடுதீவு நல்லையப்பற்று சங்கர முருகமூர்த்தி, கோண்டாவில் தேவபாராயண அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

## திருவிழாவை முன்னிட்டு விசேட படகுச் சேவை


(குருநகர்)

பூநகரி - மண்ணித்தலை புனித செபஸ்தியார் ஆலயத் திருநாட்களை ஒட்டி தினமும் மணியம்தோட்டத்தில் இருந்து மண்ணித்தலைக்கு இயந்திரப் படகு சேவை நடத்தப்படவுள்ளது.

இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் ஆலயத் திருநாட்களுக்கு சென்று வரக்கூடியதாக இப்படகுச் சேவை நடத்தப்படவிருப்பதாக மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மண்ணித்தலையில் இருந்து காலை 6.30 மணிக்கு மணியம் தோட்டம் நோக்கியும், பிற்பகல் 1.30 மணிக்கும், மாலை 4.30 மணிக்கும் மணியம்தோட்டத்திலிருந்து மண்ணித்தலைக்கும் படகுச் சேவை நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருநாள் கொண்டாட்டங்கள் நடைபெற்று முடிவடைந்த பின்பாகவும் இம்மாதம் 31ஆம் திகதி புதன்கிழமை வரை இப்படகுச் சேவையை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (68)



நல்லூர் கந்தன் ஆலய 20ஆம் திருவிழாவான நேற்றைய தினம் கைலாச வாகனத்தில் கந்தன் வீதியுலா வருவதைக் காணலாம். (26)

## மாநகர சபையின் மாதாந்தாக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாநகர சபையின் ஏழாவது மாதாந்தப் பொதுக்கூட்டம் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் மாநகர சபை முதல்வரின் தலைமையில் இடம் பெறும்.

## கைக்குண்டுத் தாக்குதல்

(கொழும்பு)

நொச்சியாகம பகுதியில் உள்ள வீடொன்றின் மீது கைக் குண்டுத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முன்தினமிரவு இனந் தெரியாதோரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக நொச்சியாகம பொலிஸார் குறிப்பிட்டனர்.

இச் சம்பவத்தில் வீட்டின் உரிமையாளரும் அவரது மனைவியும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படுகாயமடைந்த ஒருவர் மேலதிக சிகச்சைகளுக்காக அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## முல்லை - திருகோணமலை நேரடி பஸ் சேவை ஆரம்பம்

(அம்பலப்பெருமாள்)

முல்லைத்தீவிலிருந்து திருகோணமலைக்கான நேரடியான பேருந்து சேவை ஒன்று நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது தனியார் போக்குவரத்து கழகத்தினூடாக இப்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை நாட்களும் மாங்குளம், வவுனியா சென்றே மக்கள் திருகோணமலைக்கு சென்று வந்த நிலையில் தற்போது இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ள தால் மக்கள் தாம் இலகுவாக போக்குவரத்தை மேற்கொள்ளக் கூடியதாக இருப்பதாக தெரிவிக்கின்றனர். (121)

## மகா கும்பாபிஷேகம்



(வவுனியா)

வவுனியா கோவில்குளம் ஸ்ரீதேவிபூதேவி சமேத ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் இன்று சிவஸ்ரீ முத்துரத்தின வைத்தியநாதக்குருக்கள் தலைமையில் 10 மணி முதல் 11.39 வரையுள்ள துலாலக்கின சுபவேளையில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 24 தினங்களும் மண்ட லாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (39)

எவன் ஒருவனுக்கு தன்னிடத்தில் நம்பிக்கை இல்லையோ அவனே நாத்திகன். புதிய மதம் தன்னம்பிக்கை இல்லாதவனைத்தான் நாத்திகன் என்று சொல்லுகிறது.

- சுவாமி விவேகானந்தர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## அமைதி விரும்புவோரின் கடமை!

மர்ம மனிதனின் பிரச்சினை கடைசியில் யாழ்ப்பாணத்திற்கும் வந்தேவிட்டது. நாவாந்துறையிலும் நேற்று முன்தினமிரவு அல்லோல கல்லோலம் ஏற்பட்டு, சுமார் 100 பேர் அளவில் இன்னமும் தடுப்புக்காவலில் இருக்கும்படியாக நிலைமை சிக்கலுக்குள்ளாகியிருக்கிறது.

தங்கள் வீட்டு ஆண்களை விடுவிக்கும் வரை வீடு செல்ல முடியாது என்று நீதிமன்ற வாசலில் நேற்று இரவு வரை காத்து நின்றார்கள் நாவாந்துறை மக்கள். யாழ்.பொது மருத்துவமனையிலும் காயப்பட்ட 17 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எப்படி இது எல்லாம் நடந்தது? ஏன் நடந்தது? இங்கு மட்டும் இது புதிதாக நடந்தது அல்ல என்பதால் இது குறித்து நாம் விளங்கிக் கொள்ளக்கூடியதாக ஏராளம் செய்திகள் குறுகிய காலப் பகுதிக்குள் நிறைய வந்துவிட்டன. கிழக்கில் ஆரம்பித்துப் பரபரப்பான இச்சம்பவங்கள், பின்னர் படிப்படியாக பல பாகங்களுக்கும் தொற்றிக் கொண்டது. புத்தளத்தில் ஒரு பொலிஸ்காரர் இறக்கவும் நேரிட்டது.

நாம் உய்த்துணர முடிவது, ஏற்கனவே நிகழ்ந்து கொண்டிருந்த ஒரு மறைவான சம்பவம், ஓரிடத்தில் பொதுமக்களால் துணிந்து எதிர்க்கப்பட்டவுடன், அந்த எதிர்ப்பும் துணிச்சலும் ஏனைய இடங்களுக்கும் பரவியிருக்கிறது என்பதையே.

இது தாக்குகிறவர்களுக்கும், தாக்கப்படுகிறவர்களுக்கும் காரணம் நன்கு தெரிந்த நிகழ்வுகளாகத்தான் இருக்க வேண்டும். "கிறிஸ் மனிதன்", "மர்ம மனிதன்" என்றெல்லாம் சொல்லி அவனது சாகசங்களை "சுப்பர் மான", "ஸ்பைடர் மான்" போல நம்ப முடியாதளவுக்கு மிகைப்படுத்தி பொதுமக்களே கதை பரப்புவதற்குப் பின்னால் நிச்சயம் ஒரு காரணம் இருக்க வேண்டும். அது என்ன காரணம்?

நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த பத்திரிகையாளர் மற்றும் பொதுமக்களைச் சந்தித்த நிகழ்வில் யாழ்.கட்டளைத் தளபதி ஹத்துருசிங்க சொன்னார்; "சந்தோசமாகப் பழகுகிறீர்கள்; திடீரெனத் தாக்கவும் ஆரம்பித்து விடுகிறீர்கள். என்ன செய்வது?" என்பதாக. சந்தோசமாக பழகுகிறவர்கள் வேறு, தாக்குகிறவர்கள் வேறு என்ற தொனியும் அவரது ஆதங்கத்தில் இருந்தது.

யாரையோ எதையோ தேடி ஊருக்குள் இரவு நேரங்களில் வருகிறவர்களே தாக்கப்படுகிறார்கள். பொதுமக்களால் தாக்கப்படுகிற அந்த 'மர்ம' மனிதர்கள் படை முகாம்களுக்குள்ளேயே போய் ஒளிகிறார்கள் என்பது மக்களின் குற்றச்சாட்டு.

நேற்று மாலை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடத்திய பிரதேச செயலர்கள், கிராம சேவையாளர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில், வடமராட்சியிலிருந்து வந்தவர் தெரிவித்த குற்றச்சாட்டு அவ்விதமே இருந்தது.

அதற்குப் பதிலளித்த பொலிஸ் அதிகாரி அவ்விதம் நடப்பதை நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம் என்றே சொன்னார். அதன் பின்னரே இதன் சூத்திரதாரிகளை இனம் காண்பதற்கும், மக்கள் சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்வதால் நேரும் சிக்கல்களைத் தவிர்ப்பதற்கும், அதேநேரம் மக்கள் பாதிப்புகளிலிருந்து தற்காத்துக் கொள்வதற்குமாக பிரதேசம் தோறும் மக்கள் விழிப்புக்குழுக்களை அமைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

வேறு எந்த முடிவும் நடைமுறைச் சாத்தியமாகக் கூடியதல்ல என்ற வகையில் விழிப்புக்குழுக்களே இந்த உடனடிப் பிரச்சினைக்குத் தீர்வாக முடியும். இது தவிர, கைது செய்யப்பட்டிருப்பவர்கள் விடுவிக்கப்படவும் வேண்டும். அவர்கள் பாதிக்கப்பட்டதால் உண்டான கோபத்தில் அவர்கள் செய்தவை மன்னிக்கப்பட வேண்டும்.

அழுகையும் ஆத்திரமுமாக நீதிமன்ற வாசலில் தங்கள் உறவுகளுக்காகக் காத்திருந்த மக்கள் மன ஆறுதலுடன் வீடுகளுக்குத் திரும்பிப் பயம் நீங்கி வாழ வகை செய்யப்படல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் இயல்பு நிலையை குழப்பிவிடாதிருக்கவும், மேலும் அசம்பாவிதங்களைத் தடுக்கவுமான முயற்சிகளில் ஈடுபடுவது அமைதியை விரும்புவோரின் செயலாக வேண்டும்.

– ஆசிரியர்.

# வடக்கில் நான்கு மருத்துவமனைகள் 200 மில்லியன் செலவில் புனரமைப்பு

## சுகாதார அமைச்சு தகவல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தின் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இவ்வருடம் நான்கு வைத்தியசாலைகள் 200 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன என சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி,பளை ஆகிய பிரதேசங்களில் தலா ஒரு பிரதேச வைத்தியசாலையும் முழங்காவலில் ஒரு ஆதாரவைத்தியசாலையும் அமைக்கப்படவுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஒரு பிரதேச வைத்தியசாலையும் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளன.

யு.எஸ்.எயிட் நிறுவனத்தின் அனுசரணையுடன் சுகாதார அமைச்சு மற்றும் வடமாகாண சுகாதார அமைச்சு ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் இவ் வைத்தியசாலைகள் அமைக்கப்படவுள்ளது.

இதில் ஒவ்வொரு வைத்தியசாலையும் 50 மில்லியன் ரூபா நிதிச் செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது. இவ் வைத்தியசாலைகளின் நிர்மாணப்பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் டாக்டர் பாலித்த மகிபால தெரிவித்தார்.

இவ் வைத்தியசாலைகளை அமைப்பதற்கான அனுமதி சுகாதார அமைச்சுக்குக் கிடைத்துள்ளதுடன் நிர்மாணப்பணிகளுக்கான நிதியும் சுகாதார அமைச்சுக்கு கிடைத்துள்ளது.

இதன்படி நிர்மாணப் பணிகள் தொடர்பான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் சில வாரங்களுக்குள் இந்தப் பணிகள் அனைத்தும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டார்.

# பாஸ் நடைமுறையால் மீனவர்கள் தொழிலை இழக்கும் அபாய நிலை

## கடற்தொழிலாளர் சம்மேளத் தலைவர்

தற்போது அமுல்ப்படுத்தப்படும் பாஸ் நடைமுறையினால் மீனவர் குடும்பங்கள் தொழில் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

என கடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர் எஸ்.தவரெட்ணம் தெரிவித்தார்.

கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான பாஸ் நடைமுறை மீண்டும் அமுல்ப் படுத்தப்படுவது தொடர்பாக அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மீண்டும் மீனவர்களுக்கான பாஸ் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டமைக்கான காரணம் குறித்து மீனவக் குடும்பங்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

போர் முடிவுற்ற நிலையில் சுதந்திரமாக தமது தொழிலை மேற்கொண்ட இவர்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் பாஸ் நடைமுறையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடற்தொழிலில் ஈடுபடுவோர் நீரோட்டம் பார்த்தே தமது தொழிலில் ஈடுபடுகின்றனர். கடலுக்குச் செல்வதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு பாஸ் நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டால் இவ்வாறு தொழிலை மேற்கொள்ள முடியாது.

இதனால் அவர்கள் தமது தொழில்மூலம் வருமானத்தை ஈட்ட முடியாது பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகிவிடுகின்றன. ஆகவே இது குறித்து மீளாய்வு செய்யப்படவேண்டியுள்ளது என்றார். (எஸ்)

# காலமானார்

(வவுனியா)

ஓய்வுபெற்ற வவுனியா தெற்கு கல்வி வலயப் பணிப்பாளர் றஞ்சனி ஒஸ்வோல்ட் வயது - 61 நேற்றுக்காலை 11 மணியளவில் இறம்பைக்குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்

கடந்த சில ஆண்டுகாலம் புற்றுநோய் காரணமாக சிகிச்சை பெற்று வந்த இவர் வவுனியா இறம்பைக்குளத்தைப் பிறப்பிடமாகக்கொண்டவராவார் இறம்பைக் குளம் மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான இவர் உதவி ஆசிரியராக தொழிலில் இணைந்து கொண்டு படிப்படியாகப் பதவி உயர்வுகளைப் பெற்று வலயக்கல்விப் பணிப்பாளராக சுமார் 10 ஆண்டு காலம் கடமையாற்றி ஓய்வு பெற்றவர் ஆவார் (39)

# கிழக்கில் பால் உற்பத்தியை அதிகரிக்க ஜப்பான் இயந்திரங்கள் கையளிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ஜப்பான் பீஸ் வின்ட்ஸ் நிறுவனத்தால் 31.4 மில்லின் ரூபாய் பெறுமதியான 2 வாகனங்களும் பால் உற்பத்தி இயந்திரங்களும் கிழக்கு மாகாண கால்நடை மற்றும் விவசாய அபிவிருத்தி அமைச்சிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

ஜப்பானிய தூதுவராலயத்தின் இரண்டாவது செயலாளர் கிழக்கு மாகாண கால்நடை மற்றும் விவசாய அமைச்சர் துரையப்பா நவரெட்ணராஜாவிடம் கிழக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் வைத்து இவற்றைக் கையளித்தார்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் பால் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்தல் தொடர்பான செயலமர்வொன்று கிழக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது குறித்த திட்டத்தை செயற்படுத்தும் வழிமுறைகள் பற்றி அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதில் கிழக்கு மாகாண கால்நடை மற்றும் விவசாய அமைச்சர் துரையப்பா நவரெட்ணராஜா, கிழக்கு மாகாண பிரதம செயலாளர் வி.பி.பாலசிங்கம், திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# சிமெந்து தட்டுப்பாட்டை நீக்குவதற்கு பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி

இலங்கையில் நிலவும் சிமெந்துத தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு பாகிஸ்தானிலிருந்து சிமெந்தினை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் தலைவர் சிசிர ஜனந்த பரணகம தெரி வித்தார்.

இத்திட்டத்தின் கீழ் ஐம்பதாயிரம் சிமெந்துப் பக்கெட்டுகள் முதற்கட்டமாக நேற்றுமுன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததாகவும் அவர் கூறினார்.

இம்மாத முடிவுக்குள் மேலும் ஒரு இலட்சம் சிமெந்துப் பக்கட்டுகளை பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கையில் சிமெந்துத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கில் இறக்குமதி செய்யப்படும் இந்தச் சிமெந்துப் பைகள் யாவும் 645.00 ரூபா விலையில் பஞ்சிகாவத்தையிலுள்ள களஞ்சியசாலை ஊடாக விநியோகிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

## விபத்தில் யுவதி காயம்

மோட்டார் சைக்கிளில் சறுக்குண்டு விழ்ந்ததில் யுவதி படுகாயம் அடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 11.00 மணிக்கு பருத்தித்துறையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த நிர்மலா (வயது-32) என்பவரே படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் மத்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

# டெங்குநோய் பரவலைத் தடுக்க நாடு முழுவதும் மீண்டும் செயற்பாடு

(மட்டக்களப்பு)

வடகீழ் பருவப்பெயர்ச்சிக் காலம் ஆரம்பிப்பதனால் மீண்டும் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. வடகீழ் பருவப்பெயர்ச்சி மழை நாட்டின் பல பகுதிகளுக்கு கிடைப்பதன் காரணமாக நாடு முழுவதும் டெங்கு ஒழிப்பு செயற்திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு அமைச்சின் பூரண ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதேவேளை வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் டெங்குக் காய்ச்சல் காரணமாக 121 மரணங்கள் பதிவாகியுள்ளதோடு 16063 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆய்வுப்பிரிவு குறிப்பிடுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் 6345 பேர் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 58 பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில் நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் போன்ற பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பயிற்சிக்குரிய கல்வித் தகைமையாக க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கில பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் சித்தி. அல்லது

ஏதேனும் 4 பாடங்களில் திறமைச்சித்தியுடன் கணிதம், ஆங்கிலம், உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தி.

அல்லது

ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்கவேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப்பெயர் முகவரி பிறந்த திகதி தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர் நைற்றா இல 7 கோவில் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர் வரும் முதலாம் திகதிக்கு முன்னர் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கை நெறி (NCICT) க்கான விண்ணப்பம் என தவறாது குறிப்பிட்டு அனுப்பிவைக்க வேண்டும் என சபையின் மாவட்ட முகாமையாளர் கி. கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

## குரக்கன் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்

(அச்சுவேலி)


வலிகாமம் கிழக்குப் பகுதி யில் குரக்கன் தானியப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் அதி களவில் ஈடுபட்டிருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது.

கடந்த வருடத்தில் குரக்கன் தானியப் பயிர்ச்செய்கை மிகவும் குறைந்தளவில் இடம்பெற்றிருந்த போதிலும், இம்முறை அதிகள விலான பிரதேசங்களில் குரக் கன் செய்கை இடம்பெற்று வருகின்றது.

தற்போது குடாநாட்டில் பர வலாகப் பெய்து வரும் மழையானது குரக்கன் செய்கையாளர் களுக்கு நன்மையானதாக அமைந்துள்ள அதேவேளை, வெங்காய அறுவடையில் ஈடு பட்டுள்ள விவசாயிகளுக்குப் பெரும் பிரச்சினையாக இருப்ப தனால் உரிய நேரத்தில் வெங்காயத்தை அறுவடை செய்து சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதனையும் காணக் கூடியதாக உள்ளது.

(03)

## நல்லூர்க் கந்தனுக்கு இன்று கஜாவல்லி மஹாவல்லி உற்சவம்



வள்ளியெனுமுயிரை வாதாடி நல்லூரான்
கொள்ளும் இயல்பைக் குறித்த விழா - உள்ளத்திற்
தெய்வீகப் பண்பைத் தெரிவிக்குந் தீர்வதனால்
உய்யும் வழியுண்டுயிர்க்கு.

- கந்தன் பாமாலை

தங்க ரதமேறி வரும் சங்கரனின் திருக்குமரா!
எங்கள் குறை தீர்த்திடவே எழில் நல்லையில் உறைபவனே!
சங்கத் தமிழ் வளர்த்த சண்முகனே சரவணனே
பங்கமிலாய் பெருவாழ்வைத் தந்திடுவாய் முருகையனே!

- இராசையா ஸ்ரீதரன்.

வண்ண மயில் ஏறி வருகின்ற வடிவேலவா
தண்எழில் சூழ் நல்லையம்பதிக்கிறைவா - வண்ண
மயில் மீதில் ஏறி வர வேண்டும் எந்தனருகே.
என் மனமார உன் புகழை நான் பாடவே.

- நேத்தாஜினி மண்டைதீவு.

## தேசிய மொழிகள் அமைச்சின் மும்மொழி சிறுகதைப்போட்டி

(யாழ்ப்பாணம்)

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு வேற்றுமையில் ஒற்றுமையினூடாக பலம்பெற்ற சமாதானமிக்க இலங்கைத் தேசம் என்ற தொனிப்பொருளில் திறந்த மற்றும் உத்தியோகத்தர்கள் என்ற இரு பிரிவுகளாக மும்மொழி சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இதில் திறந்த போட்டியில் எவரும் பங்குபற்றலாம் ஆங்கிலம் தமிழ், சிங்களம் ஆகிய மும்மொழிகளில் சிறுகதைகள் தனித் தனியாக முன்வைக்கப்படவேண்டும் A4 தாளில் ஒரு பக்கத்தைப் பயன்படுத்தி தெளிவான கையெழுத்தில் (கணினித்தட்டச்சில் அமைத்தல் வேண்டும்.

ஆக்கத்தை சமர்ப்பிப்போர் தங்களது விபரங்களை அடக்கிய விண்ணப்பத்துடன் சிறுகதை தங்களுடையது என நிறுவனத்தின் தலைவருடாக அல்லது உங்கள் பிரதேச கிராம உத்தியோகத்தரின் ஊடாக உறுதிப்படுத்தி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர் தேசிய மொழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு இல 40 புத்தகமுவ வீதி, இராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கட்டுரை முன்வைக்கப்படும் மொழி மூலத்திற்கு ஏற்ப பரிசில் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும் இதில் முதலாமிடத்துக்கு 30 ஆயிரம் ரூபாவும் 2ஆம் இடத்திற்கு 20 ஆயிரம் ரூபாவும் 3ஆம் இடத்திற்கு 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என அமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுகதை இலக்கியத்துக்கான பயிலரங்கிற்கு விண்ணப்பங் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு பிரதேச பண்பாட்டு பேரவையினால் நடாத்தப்படும் சிறுகதை இலக்கியத்துக்கான பயிலரங்கு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 08 ஆம் திகதி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவர்கள் இதற்கான விண்ணப்பப்படிவத்தை பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்று விண்ணப்பிக்கலாம்.

அல்லது தமது சுயவிபரங்கள் உள்ளடங்கிய விண்ணப்பங்களை கிராமசேவையாளிடம் கையிக்குமாறும் அல்லது நேரடியாக பிரதேச செயலர், பிரதேச செயலகம், கோப்பாய் என்னும் முகவரிக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கலாம். அத்துடன் இப்பயிலரங்கில் மாணவர்கள், ஆசிரியர்கள், ஆர்வலர்கள் யாவரும் பங்கு பற்றலாம் என கோப்பாய் பிரதேச செயலர் ம. பிரதீபன் அறிவித்துள்ளார்.

## உலகக்கிண்ண கிரிக்கட் போட்டி நாளை தினமுரசின் பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு தினமுரசு பத்திரிகை நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட போட்டியில் பரிசு பெற்றவர்களுக்கான பிரிசில்கள் வழங்கும் நிகழ்வு, நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இல 373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள தினமுரசு வளாகத்தில் நடைபெறவுள்ளது.

உலகக்கிண்ணத்தை வெல்லப்போகும் அணி எது, என்ற கேள்விக்கு சரியான விடைகளை அனுப்பி குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மூன்று அதிர்ஷ்ட சாலிகளின் பெயர் விபரம்

**முதலாமிடம:-** அ. தர்ஷிகா திருநகர் வடக்கு, கிளிநொச்சி.

**இரண்டாமிடம்:-** கோ. லக்கீசன் 19, கணேசபுரம், கிளிநொச்சி

**மூன்றாமிடம்:-** த.சுமதி 172/3 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

இவர்களுடன் தினம் ஒரு பரிசுப் போட்டியில் பங்கு பற்றி அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவுசெய்யப்பட்டோர் விபரம் வருமாறு.

**போட்டி இல 1** ச. மிறேன்ராஜ் (பூனாறி வீதி, கொக்குவில், **போட்டி இல 2** இ.புனிதவன் (கிறிஸ்தவ இளைஞர் கல்லூரி மருதனார் மடம்), **போட்டி இல 3.** இ. ஸ்ரீகஜன் - சுன்னாகம்) **போட்டி இல. 4** ர.நிசாதன் ( கோண்டாவில்), **போட்டி இல 5** ப.ஈசனார் (மானிப்பாய்), **போட்டி இல 6.** பா.சந்தனேஸ்வரன் (கொக்குவில்), **போட்டி இல 7.** வ. தியாகராசா (காரைநகர்), **போட்டி இல.8.** பு. கஜிந்தன் (பூனாறிலேன்), **போட்டி இல 9.** த.தயாபரன் (ஓட்டுமடம்), **போட்டி இல 10** ச. சுகந்தி (கச்சேரி வீதி நல்லூர்) **போட்டி இல 11.** கு.கிருசாந்தி (பத்திரகாளிகோவிலடி), **போட்டி இல 12.** கே. அரசேஸ்வரன் (கலைமகள் வீதி நல்லூர்), **போட்டி இல. 13.** அ.கபிசன் (பண்டத்தரிப்பு), **போட்டி இல. 14.** அ.கபீர்தன் (நாவலர் வீதி) **போட்டி இல: 15.** கோ. அஜந்தா (கணேசபுரம், கிளிநொச்சி), **போட்டி இல. 16.** கு.அமுதிசன் (அரசடி வீதி, கந்தர்மடம்), **போட்டி இல. 17.** தி.கலைரூபன் (சேர்ச்லேன் நாவாந்துறை), **போட்டி இல. 18** ந.கோபிகுமரன் (சுழிபுரம்), **போட்டி இல. 19** உ.ஜேறோஸ் (ஊர்காவற்துறை) **போட்டி இல. 20** ச.மாதவி (சண்டிலிப்பாய்), **போட்டி இல. 21** அ.மேரிஏஞ்சல் (பிரதான வீதி யாழ்ப்பாணம்), **போட்டி இல. 22.** பொ.கிருசாந்தன் (கிளிநொச்சி), **போட்டி இல. 23.** சம்சிகா சிறிதரன் (பெருமாள் கோவிலடி), **போட்டி இல. 24** ர.நிசாதன் (கோண்டாவில் கிழக்கு), **போட்டி இல. 25** நா. சுந்தரலிங்கம் (சண்டிலிப்பாய்), **போட்டி இல. 26** ச. மிறேன்ராஜ் (பூனாறிலேன் கொக்குவில்), **போட்டி இல. 27** அ.பொபி அனஸ்ரின் (கோவில் வீதி, யாழ்ப்பாணம்), **போட்டி இல. 28.** வே. குமாரசாமி (கரவெட்டி), **போட்டி இல. 29** அ.ரதீசபெல் (கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

பரிசுக்குரியவர்கள் குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு பரிசில்களை பெற்றுச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


## வீதித் திருத்தம் துரிதம்

(அச்சுவேலி)

தொண்டமானாறு அருள்மிகு செல்வச் சந்நிதி முருகன் ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு வல்லை நாற் சந்தியிலிருந்து செல்வச்சந்நிதி ஆலயம் வரையான வீதிதிருத்த வேலைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

ஆலய உற்சவகாலத்தில் இவ்வீதியால் செல்லும் பக்தர்களுக்கு ஏற்படக்கூடிய இடைஞ்சல்களைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் முன்கூட்டியே இவ்வீதி செப்பனிடப் பட்டுள்ளமையால் வாகனப்போக்குவரத்துக்களும் இடையூறு இன்றி இடம் பெறக்கூடியதாக அமைந்துள்ளது.

(3)







யாழ்ப்பாணம் நாவாந்துறையில் நேற்று முன்தினம் இரவு பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே மர்ம மனிதன் தொடர்பாக ஏற்பட்ட முறுகலை அடுத்து நேற்று அப்பகுதியின் சந்தை, கடைகள், வீதி என்பன வெறிச்சோடிக்காணப்பட்டது. (படம்: பார்த்தீபன்)

# 65 சிறுவர் தொழிலாளர்கள் யாழில் இனங்காணப்பட்டனர்

## யாழ்.செயலக புள்ளி விபரங்கள் தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இவ் வருட ஜனவரி முதல் யூன் வரையான அரையாண்டு காலப் பகுதியில் 65 சிறுவர்கள் சிறுவர் தொழிலாளர்களாக இனங் காணப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலகப் புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி 15 பிரதேச செயலக பிரிவுகளில் 13 பிரதேச செயலக பிரிவில் 65 சிறுவர்கள், சிறுவர் தொழிலாளர்களாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதில் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் 4 சிறுவர்களும், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் ஒரு சிறுவரும், காரைநகர்ப் பிரிவில் 4 சிறுவர்களும், யாழ்ப்பாணத்தில் 5 சிறுவர்களும், நல்லூர்ப் பிரிவில் 8 சிறுவர்களும், சண்டிலிப்பாயில் 18 சிறுவர்களும், சங்கானையில் 7 சிறுவர்களும், உடுவில் பிரிவில் 1 சிறுவனும், தெல்லிப் பளைப் பிரிவில் 2 சிறுவர்களும், கோப்பாய் பிரிவில் 7 சிறுவர்களும், கரவெட்டிப் பிரிவில் 5 சிறுவர்களும், மருதங்கேணிப் பிரிவல் 3 சிறுவர்களும் சிறுவர் தொழிலாளர்களாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதில் ஊர்காவற்றுறை, சாவகச்சேரி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் சிறுவர் தொழிலாளர்களாக எவரும் இல்லை என மாவட்ட செயலக புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

## புதிய மணிமண்டபம்

(அச்சுவேலி)

ஆவரங்கால், அருள்மிகு நடராஜ ராமலிங்கேஸ்வரர் கோயிலுக்கு புதிய மணிமண்டபம் அமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

பக்தர்களின் உதவியுடன் பல மில்லியன் ரூபா செலவில் கலை நயம் மிக்க முறையில் தெய்வீகச் சிறப்புடன் அமைக்கப்பட்டு வரும் இம்மணிமண்டபம் சுமார் முப்பது அடி நீளம் கொண்டது.

மேலும் இவ் ஆலயத்தின் தீர்த்தக் கேணிக்கு சுற்றுமதில் அமைக்கப்பட்டு வருவதுடன் கேணிப் பகுதியில் புதிய தீர்த்த மண்டபமும் பல இலட்சம் ரூபா செலவில் கலைநயத்துடன் அமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (03)

## காணி உறுதி தேடுதல் விண்ணப்பம் பூர்த்தி செய்வதில் பொதுமக்கள் சிரமம்

(அச்சுவேலி)

யாழ்ப்பாணம் கச்சேரியில் இயங்கிவரும் காணிப்பதிவுப் பரிவில் காணி தொடர்பான விடயங்களை பார்வையிடச் செல்லும் பொதுமக்கள் பெரும் இடர்களுக்கு உள்ளாகி வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இங்கு காணி தொடர்பான உறுதியைத் தேடுதல் செய்து பார்வையிடுவதற்காக விண்ணப்பகாரர்களுக்கு வழங்கப் படும். விண்ணப்பப்படிவம் தனியே ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளில் மட்டும் விநியோகிக்கப்பட்டு வருவதால் அதனைப் பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதில் மக்கள் பெரிதும் இடர்பட்டு வருகின்றனர்.

ஆங்கில, சிங்க மொழி விண்ணப்பப் படிவங்களைச் சரியாக வாசித்து பூரணப்படுத்த முடியாத பலரும் பிறர் உதவியினை நாடவேண்டியுள்ளது. இதனால் வெளியே பணம் செலுத்திப் படிவத்தை நிரப்பிக் கொள்வதையும் காணமுடிகிறது.

எனவே, பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டு மக்களுக்கு ஏற்படும் இடர்களை தீர்க்கக்கூடிய வகையில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோருகின்றனர். (03)

## அலங்காரத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். நாவாந்துறை வசந்தபுரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ ஆதி வைரவர் ஆலய அலங்காரத் திருவிழா நடைபெற்று வருகின்றன.

18 ஆம் திகதி ஆரம்பிக்கப் பட்ட திருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி நிறைவு பெறவுள்ளது.

தினமும் மாலை 6 மணிக்கு திருவிழாக்கள் நடைபெற்று விசேட பூசையும் பொங்கல் வழிபாடும் இடம்பெறவுள்ளன. (105)

## கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா

(யாழ்.நிருபர்)


கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. யுத்த காலத்தில் பெரிதும் பாதிப்படைந்த இவ்வாலயம் ஆலய பரிபாலன சபையினர் மேற்கொண்ட துரித நடவடிக்கையினால் புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவடைந்த நிலையில் வருடாந்த மஹோற்சவம் நடைபெறவுள்ளது. இதேவேளை, ஆலய வளாகத்தின் ஒரு பகுதியிலும், மடாலயத்திலும் உள்ள இராணுவத்தினர் இடம்மாறி வருடாந்த மஹோற்சவம் சிறப்புற ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென ஆலய பரிபாலன சபையினரும் அடியார்களும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10)

## இரும்பு வியாபாரத்தினால் போக்கு வரத்துகள் பாதிப்பு

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி பெரிய மொஹதீன் பள்ளிவாசலுக்கு அண்மையில் வீதியோரத்தில் பழைய இரும்புகள் குவிக்கப்பட்டு இரும்பு வியாபாரம் நடைபெறுவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாக முஸ்லிம் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். வீதியின் இரு மருங்கிலும் பழைய இரும்புகள் பாவனைக்குதவாத வாகனங்களின், உதிரிப்பாகங்கள் குவிக்கப்படுவதால் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுவதாகக் கூறப்படுகிறது.

பள்ளிவாசல் அமைந்துள்ள சுற்றாடலில் குப்பைகூழங்கள் கொண்டுவந்து குவிக்கப்படுவதால், தமது வழிபாட்டுத் தலமான பள்ளிவாசல் அமைந்துள்ள சூழல் விசமிகளால் அசுத்தமாக்கப் படுவதாகவும், தினமும் தொழுகைக்காக வருகைதரும் இஸ்லாமிய மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இவ்விடயம் தொடர்பாக மாநகரசபை நடவடிக்கை எடுக்கவேண்டுமென அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (10)




மர்ம மனிதன் கிறீஸ்பூதம் எண்டு எந்தப் பேப்பரை எடுத்தாலும் எந்த நாளும் குறைஞ்சது ஒவ்வொண்டிலும் ஐஞ்சு செய்திகள் போட்டிருப்பாங் கள்.

அதுமட்டுமே! இலத்திரனியல் ஊடகங்கள் எண்டு சொல்லுற... ஓம் பாருங்கோ நானுமிப்ப எல்லாப் பத்திரிகைகள், வானொலிகள், தொலைக் காட்சியள் எல்லாம் பாக்கிறது.

அதால அவேன்ர மொழி நடையும் என்ர வாயில சரளமாப் புழங்குது. விமர் சிச்சுப் போடாதேங்கோ!

உந்தச் சங்கதியளைப் பாக்கப் பாக்கவெல்லோ எனக்கும் கொஞ்சம் நடுக்கம் புடிக்கத் தொடங்குது.

விறைச்ச கட்டை எண்டு மற்றவை சொல்லுற அளவுக்கு வெளியால பயப்பிடாத ஆள்மாதிரித்தான் நடிப்பன் பாருங்கோ!

உண்மையில சரியான பயந்தாங்கொள்ளிதான் இந்தப் பரமன். அப்பிடித்தான் பாம்பும் பயத்திலதான் கொத்துறதெண்டவை.

யானையும் பயத்திலதான் அடிக்குது. நாங்கள் அதுகளைப் பாத்துப் பயப்புடுறம்.

அதுபோக உந்த மர்ம, கிறீஸ் மனிதன்ர விசயம் அங்கால மலையகத்திலதான் நடக்கெண்டு பாத்தா கொஞ்சம் கொஞ்சமாக கிழக்குக்குத் தாவி மத்திக்கும் வந்து மன்னாருக்கும் வந்திட்டுதாம்.

இனி யாழ்ப்பாணத்துக்கும் வருமெண்டு சொல்லக்கிடேல்ல நாவாந்துறை, பொம்மை வெளிப் பக்கம் உந்தப் பூதம் வந்ததெண்டு முந்தநாள் ஒரே அல்லோலகல்லோலம்தான். நாவாந்துறை ஆக்கள் நூறு பேரையும் உள்ளபிடிச்சு போட்டிட்டினம்.

முன்னம் கிட்டத்தட்ட 30 வருசத்துக்கு முன்னால குருநகர், றெக்கிளமேஷன் பக்கத்திலயும் கிறீஸ் மனிதன் இரவில நடமாடினஎண்டு அப்ப கேள்விப்பட்டனான்.

மக்கள் திரண்டு ஆளைப் பிடிக்கப்போனா ஓடிப்போய் படைமுகாம் மற்றும் பொலிஸ் நிலையங்களில நுழைஞ்சிடுறானெண்டும் பேப்பரில போட்டிருக்கு.

இதால சனங்களுக்கு அவையளில சந்தேகம் ஏற்படுறது விந்தையில்லை. ஆனா அவங்கள் மக்களின் கைகளில் அகப்பட்டால் ஆபத்துதான். இந்த மர்ம மனிதர்களும் ஏன்தான் முகாம்களை நோக்கி ஓடினமெண்டும் தெரியேல்ல!

சனம் பயந்துபோயும், ஆத்திரப்பட்டும் அங்கங்க பொலிஸ், ஆமி மேலையும் கையை வைக்கிது. சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட காலதாமதமாகலாம். சனமும் கொஞ்சம் பொறுமையாத் தான் இருக்கவேணும்.

மினிபஸ் ஆளை அடித்து செத்த உடன பஸ்சைச் சனம் கொழுத்திப் போட்டுது. நீதிவான் வந் து பாத்திட்டு எனக்கு வேலை இல்லாமல் நீங்களே தண்டனை விதிச்சா இனி எப்பிடி விசாரிச்சு தீர்ப்பு வழங்கிறது எண்டார். அதைப் போலதான் எல்லாம்.

## நயினையிலிருந்து நல்லூருக்கான திருத்தல பஜனை பாதயாத்திரை

(யாழ்ப்பாணம்)

நயினை - நல்லூர் திருத்தலப் பஜனைப் பாத யாத்திரை இன்று புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது.

நயினை அம்பாள் ஆலயத்தில் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாளை வியாழக்கிழமை நல்லூர் ஆலயத்திற்கான பாத யாத்திரை ஆரம்பமாகவுள்ளது.

25 ஆம் திகதி வியாழக்கிழமை ஆலயங்களைத் தரிசனம் செய்து 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு கிராஞ்சி மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயத்திலிருந்து புறப்பட்டு, கிராஞ்சி முருகன் ஆலயம், கலட்டி சித்தி விநாயகர் ஆலயம், மடத்துவெளி முருகன் விநாயகர் ஆலயங்கள், வேலணை துறையூர் முருகன் ஐயனார் ஆலயங்கள், வங்களாவடி முருகன் ஆலயத்தில் கந்தர் அநுபூதி முற்றோதல் பூசை, மகேஸ்வர பூசை நடைபெற்று அதிசய வைரவர் ஆலயம், மண்கும்பான் விநாயகர் ஆலயம், அல்லைப் பிட்டி, மண்டைதீவு, பண்ணை வழியாக யாழ். சத்திரம் ஞானவைரவர் ஆலயம், கோட்டை ஸ்ரீ பாலஞான வைரவர் ஆலயம், நாவாந்துறை வைரவர் ஆலயம், நாகபூசணி ஆலயம் அன்றிரவு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் தங்கி பஜனை நடைபெறும்.

27 ஆம் திகதி சனிக்கிழமை அதிகாலை புறப்பட்டு சீனிவாசகம் வீதி வழியாக வண்ணை சிவன் காளியம்மாள், பெருமாள் கோவில் வழியாக கந்தர்மடம் சிவ உதய நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் பூசை வழிபாடு நடைபெற்று செல்வ நாகபூசணி அம்பாள் ஆலயம் அரசடி வீதி வழியாக நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம் சென்று, நல்லைக் கந்தன் திருத்தலத்தைச் சென்றடைந்து திருத்தேரின் பின் திருவீதிப் பஜனையும், வேல் அர்ச்சனையுடன் நிறைவு பெறவுள்ளது. இப்பாத யாத்திரையில் வவுனியா - வேப்பங்குளம் சைவச்சிறார் இல்ல நிர்வாகத்தர் ராணி அம்மாவும் மற்றும் அடியார்களும் கலந்து கொள்கின்றனர். திருத்தலப் பஜனைப் பாதயாத்திரை செல்லும் வீதியில் வசிப்பவர்கள் சைவக் கலாச்சாரத்திற் கமைய பூரண கும்பம் வைத்து பக்தி சிரத்தையுடன் அடியவர்களை வழியனுப்பி வைக்குமாறு அறிவிக்கபபட்டுள்ளது.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(24.08.2011 – புதன்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**

கர வருஷம்

ஆவணி 7 ஆம் நாள்.

இராகுகாலம் 12.05–1.35, சுபநேரம் 4.35 –6.05,

நட்சத்திரம்: மிருகசீரிடம் பி.ப 3.01 வரை

திதி: தசமி பி.ப. 2.37 வரை.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பணக் கஷ்டம், தேக சுகம் குறைவு, நண்பர் தொல்லை, குடும்பத்தில் குழப்பம், வீண் அலைச்சல்.

ரிஷபம:– மன மகிழ்ச்சி, பண வரவு, தொழில் விருத்தி, குடும்பத்தில் குதூகலம், அதிகாரப் போட்டி.

மிதுனம் :– பணக் கஷ்டம், வீண் அலைச்சல், நண்பர் தொல்லை, குடும்பத்தில் சலனம், தேக சுகக் குறைவு.

கடகம்:– தேக ஆரோக்கியம், பண வரவு, நண்பர் வருகை, நண்பர் உதவி, இறை வழிபாடு.

சிம்மம்:– பணக் கஷ்டம், மனக் கவலை, குடும்பத்தில் கவலை, நண்பர் தொல்லை, வீண் அலைச்சல்.

கனனி :– தொழில் விருத்தி, பண வரவு, நண்பர் வருகை, அதிகாரப் போட்டி, உடல் உபாதை.

துலாம் :– பணக் கஷ்டம், சுற்றத்தார் ஆதரவு, மனச் சஞ்சலம், வசதிக் குறைவு, அதிகாரிகள் சீற்றம்.

விருச்சிகம்:– தேக ஆரோக்கியம், பண வரவு, தொழில் விருத்தி, வெளிநாட்டு உதவி, கடவுள் வழிபாடு.

தனுசு:– பணவரவு, உடல் உபாதை, மருத்துவச் செலவு, அதிகாரப் போட்டி, மன உளைச்சல்.

மகரம:– தேக ஆரோக்கியம், பண வரவு, நண்பர் தொல்லை, தொழில் முடக்கம், சகோதர வெறுப்பு.

கும்பம் :– பணக் கஷ்டம், சகோதர பாசம், தொழில் முடக்கம், மனச் சஞ்சலம், வீண்அலைச்சல்.

மனம்:– குடும்பத்தில் மகிழ்ச்சி, பண வரவு, தொழில் விருத்தி, நண்பர் தொல்லை, விபத்து.

# கொடுக்கிளாய் சக்திவேல் கால்பந்து தொடர் கிண்ணத்தை வென்றது சென் அன்ரனீஸ் 'ஏ'

(வடமராட்சி கிழக்கு)

கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட கால்பந்துத் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை மணற்காடு சென் அன்ரனீஸ் 'ஏ' அணி கைப்பற்றிக் கொண்டது.

வடமராட்சி கிழக்கில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையில் கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி நேற்று நிறைவடைந்தது.

கடந்த 12 நாட்கள் நடைபெற்ற இப்போட்டித் தொடரில் வடமராட்சி கிழக்கிலுள்ள 22இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குபற்றியிருந்தது.

நேற்று நடைபெற்ற இதன் இறுதிப் போட்டியில் மணற்காடு சென் அன்ரனீஸ் 'ஏ' மற்றும் 'பி' அணிகள் மோதின.

ஆட்டம் தொடங்கி நிறைவடையும் வரை விறுவிறுப்பாக நடைபெற்றது. இறுதியில் சென் அன்ரனீஸ் 'ஏ' அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

இப்போட்டியில் வெற்றிபெற்ற சென் அன்ரனீஸ் 'ஏ' அணிக்கு விருந்தினர்களால் கிண்ணம் வழங்கப்பட்டது.

இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக இம்மண்ணின் மைந்தனும், வலி. மேற்கு பிரதேச சபை செயலருமான எஸ். புத்திசிகாமணியும், சிறப்பு விருந்தினராக பிரதேச பொலிஸ் அதிகாரியும், கௌரவ விருந்தினராக ஆழியவளை கிராம அலுவலரும் கலந்து கொண்டனர்.

மற்றும் கிராமப் பெரியவர்கள், இளைஞர்கள், கால்பந்தாட்ட ரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டுகளித்தனர். (38)

## சென் ஜோன்ஸ், ஸ்ரான்லி நாளை மறுதினம் மோதல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் இரண்டாவது சுற்று ஆட்டமொன்றில் சென் ஜோன்ஸ் கல்லூரி மற்றும் ஸ்ரான்லி அணிகள் மோதவுள்ளன.

பிரிவு மூன்றின் 17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இப்போட்டியில் சென் ஜோன்ஸ் 'ஏ' அணியும், ஸ்ரான்லி அணியும் மோதவுள்ளது.

இப்போட்டி நாளை மறுதினம் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாகவும், இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்தியாகியுள்ளதாகவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

பிரிவு மூன்றின் 17 வயது அணிகளுக்கிடையிலான இரண்டாவது சுற்றில் முதல் ஆட்டத்தில் இரு அணிகளும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சின்சினாட்டி நல்ல களம்

(சின்சினாட்டி)

அமெரிக்கன் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் சாதிப்பதற்கு நல்லதொரு பயிற்சியாகவே சின்சினாட்டி ஓப்பன் ரென்னிஸ் தொடரில் கிண்ணம் வென்றதைக் ருதுகின்றேன் என ரஷ்யாவின் மரியா ஷரபோவா தெரிவித்தார்.

கிண்ணம் வென்றதன் மூலம தரப்படுத்தலிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அமெரிக்கன் ஓப்பன் ரென்னிஸில் கிண்ணம் வெல்ல இறுதி வரை போராடுவேன் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.





பச்சிலைப்பள்ளி கல்வி வயலத்திற்குட்பட்ட முன்பள்ளிகளின் விளையாட்டு விழா கடந்த 19ஆம் திகதி பளை மத்திய கல்லூரி மைதானத்தில் சிறப்புற நடைபெற்றது. கிளிநொச்சிக் கோட்ட முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் விந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விளையாட்டு நிகழ்வில் சிறார்களின் வண்ணமயமான விளையாட்டுக்கள் பல இடம்பெற்றன. இதில் சிறார்களின் விளையாட்டு நிகழ்வைக் காணலாம்.

## ஐந்து விக்கெட்டுக்களால் வென்றது விவேகானந்தா

(தும்பளை)

தும்பளை விவேகானந்தா விளையாட்டுக்கழகம் நடத்தும் அமரர் இ. பிரபாகரன் ஞாகார்த்தமான மென்பந்து கிரிக்கெட் தொடரின் நேற்றைய ஆட்டமொன்றில் விவேகானந்தா அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

தும்பளை விவேகானந்தா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடரின் நேற்றைய ஆட்டத்தில் விவேகானந்தா அணியும், பிகோன் அணியும் மோதிக் கொண்டன.

15 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற விவேகானந்தா அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய பிகோன் அணி 15 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 61 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கபில்ராஜ் 13, நிசாந்தன், கிருசியனன் தலா ஏழு ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரமணன், சுரேஷ் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு ஆடிய விவேகானந்தா அணி 13.3 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் துளசிமாறன், தர்சனன் ஆட்டமிழக்காது முறையே 18, 10 ஓட்டங்களைப் பெற்றனர். மற்றும் அணித தலைவர் ஜசிந்தன் 14 ஓட்டங்களைப் பெற்றார்.

இதேவேளை, நாளை மாலை நடைபெறவுள்ள போட்டியொன்றில் தும்பளை நாவலர் அணியை எதிர்த்து புலோலி இளைஞர் அணி மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (62)

## சிநேகபூர்வ பயிற்சிப் போட்டி சென் ஜோன்ஸ் அபார வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 176 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இரு கல்லூரிகளின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான நடைபெற்ற இவ்ஆட்டம், சிநேகபூர்வ பயிற்சிப் போட்டியாக அமைந்தது.

இப்போட்டி நேற்று முன்தினம் சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 231 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கபில்ராஜ் 35, துவாரகசீலன் 48, சிந்துஜன் 33 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் வைகரன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு ஆடிய யாழ். இந்துக் கல்லூரி அணி 28.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 55 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சர்மா 15 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் லோகதீஸ்வரன், அஜித் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப்போட்டியில் வெற்றிபெற்றமை அடுத்து நடைபெறவுள்ள பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவின் இரண்டாவது சுற்று ஆட்டங்களுக்குப் பெரும் பயிற்சியாக அமைந்திருந்ததாக சென் ஜோன்ஸ் கல்லூரி அணியின் தல்லைவர் தெரிவித்தார்.

## ஆண்டு நிறைவுப் போட்டி வெற்றியீட்டியோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்தப்பட்ட சைக்கிள் ஓட்டம் மற்றும் மரதனோட்டம் என்பனவற்றில் வெற்றியீட்டியோரின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்தில் இடம் பெற்ற இப்போட்டிகளில், ஆண்களுக்கான 50 மைல் சைக்கிள் ஓட்டம் மற்றும் பெண்களுக்கான 10 மைல் சைக்கிள் ஓட்டம், ஆண்களுக்கான பத்து மைல் மரத னோட்டம் என்பன நடாத்தப்பட்டது.

இதில் ஆண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தை து. றஜீம், இரண்டாமிடத்தை க. குயின்ரன், கஜபாகுறெஜிமென்ற வீரர் ஆகிய இருவரும், மூன்றாமிடத்தை பா. பிரணவதாஸும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாமிடத்தை ரா. பதுமநிலாவும், இரண்டாமிடத்தை சி. பத்மசந்தியாவும், மூன்றாமிடத்தை இ. தனுஷாவும் பெற்றுக் கொண்டனர்.

ஆண்களுக்கான மரதனோட்டத்தில் முதலாமிடத்தை ஜே.நிரோஷனும், இரண்டாமிடத்தை அ. ஜெகதீஸ்வரனும், மூன்றாமிடத்தை இ.தனுசனும் பெற்றுக்கொண்டனர்.


ஆண்டு நிறைவை முன்னிட்டு கிரிக்கெட் போட்டித் தொடரும் நடாத்தப்பட்டதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

## அடுத்து வரும் ஆண்டுகளில் மீண்டும் எழுச்சி பெறுவோம்

(லண்டன்)

அடுத்து வரும் ஆண்டுகளில் மீண்டும் எழுச்சிபெற்று முதல் நிலையைப் பெற்றுக் கொள்வோம் என இந்திய அணித தலைவர் டோனி தெரிவித்தார்.

இந்தத் தொடரில் நாங்கள் 300 ஓட்டங்களுக்கு மேல் எடுக்க முடியாமல் போனது ஏமாற்றமே. துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாடவில்லை. டெஸ்டில் மிகப் பெரிய ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக்கொள்வது முக்கியமானது. அப்படி ஓட்டங்கள் குவித்ததால் தான் எதிரணிக்கு நெருக்கடி கொடுக்க முடியும். எமது துடுப்பாட்ட வீரர்கள் எந்தவித நெருக்கடியும் கொடுக்கவில்லை.




துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆடாத பட்சத்தில் பந்து வீச்சாளர்களைக் குறை கூற முடியாது. காயம் காரணமாக சகீர் கானையும், அவரை தொடர்ந்து ஹர்பஜன்சிங்கையும் இழந்தோம். முதல் டெஸ்டில் காயம் அடைந்த கம்பீர் ஓவல் டெஸ்ட் வரை உடல் தகுதி இல்லாமல் தான் ஆடினார்.

வீரர்களின் காயமும் மிகுந்த பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த மோசமான தோல்வியால் இந்திய அணி இங்கிலாந்து அணியிடம் மண்டியிட்டதாக நாம் நினைக்க வில்லை. இனி வரும் ஆண்டுகளில் இந்திய அணி மீண்டும் எழுச்சி பெறும்.

இங்கிலாந்து அணி இந்தத் தொடரில் மிகவும் சிறப்பாக விளையாடியது. உலகின் தலை சிறந்த அணியிடம்தான் நாங்கள் ஆடினோம். ஒருநாள் போட்டியில் நாங்கள் உலக சம்பியன். இதனால் அதைத் தக்க வைக்க ஒருநாள் தொடரில் சிறப்பாக ஆடவேண்டும். டெஸ்ட் தொடரில் ஏற்பட்ட தோல்வியால் இந்திய அணிக்கு தற்போது கூட்டு முயற்சி தேவை. இந்திய அணி மீண்டும் எழுச்சி பெறும் எனவும் தெரிவித்தார்.

# டெஸ்ட் போட்டி ஒரு கடினமான பயிற்சிப்பள்ளி அதில் தேர்ச்சி பெற்றால் எதிலும் சாதிக்கலாம்!

## இளம் வீரர்களுக்கு அறிவுரை கூறுகின்றார் ட்ராவிட்



(லண்டன்)

டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கக் கிடைக்கும் வாய்ப்பினை இளம் வீரர்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால், டெஸ்ட் போட்டி ஒரு கடினமான பயிற்சிப் பள்ளி அதில் தேர்ச்சி பெற்றுவிட்டால் அனைத்து விதமான போட்டிகளில் சாதிக்கலாம் என் ட்ராவிட் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடர் கடினமான தொடராக இருந்தது. இது தொடக்கம் முதல் கடைசி போட்டி வரை தொடர்ந்து கொண்டேயிருந்தது. எப்போதுமே 2 அல்லது 3 வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஆனால் இத்தொடரில் அனைத்து இந்திய வீரர்களும் சொதப்பியது மிகவும் வருத்தம் அளிக்கிறது.

இதில் எங்களுடைய வீரர்களும் குறைவான திறனை வெளிப்படுத்தவில்லை. இருந்தபோதும், இங்கிலாந்து வீரர்கள் அதிகப்படியான ஓட்டங்களைக் குவித்தது வீரர்களுக்கு சிறு பதற்றடத்தை ஏற்படுத்தியது. இங்கிலாந்து வீரர்கள் தொடரை கைப்பற்றியதற்குக் காரணம் அந்த அணியின் பந்து வீச்சாளர்களே காரணம். உண்மையிலேயே அவர்கள் சிறப்பான முறையில் பந்துவீசினர். இத்தொடரிலிருந்து ஒரு சில பாடங்களை கற்றுக் கொண்டோம்.

இங்கிலாந்து அணியினர் தொடரின் ஆரம்பத்திலிருந்தே உற்சாகமாய் செயற்பட்டனர். அவர்கள் துடுப்பாட்டம், பந்து வீச்சு, களத்தடுப்பு என மூன்றிலும் வலுவான நிலையில் உள்ளனர். மேலும் வீரர்களின் உடற்தகுதியும் நன்றாக உள்ளது. இந்தளவுக்குச் சிறப்பான முறையில் பந்து வீசி வரும் இவர்களுக்கு எதிராக சதம் அடித்தது திருப்திகரமாக உள்ளது. நான்காவது டெஸ்டின் முதல் இன்னிங்சில் ஆரம்ப வீரர் கம்பிருக்கு காயம் ஏற்பட்டதையடுத்து நான் களமிறங்க வேண்டியதாகி விட்டது. இதற்கு நான் மனதளவில் தயாராகி இருந்தேன். இதனால் தான் என்னால் சாதிக்க முடிந்தது. மீண்டும் இரண்டாவது இன்னிங்சில் ஆரம்ப வீரராக இறங்கிய போது மனதளவில் போட்டிக்கு தயாராகவில்லை. இதனால் இரண்டாவது இன்னிங்சில் சாதிக்க முடியாமல் போனது.

இங்கிலாந்துச் சுழற்பந்து வீச்சாளர் ஸ்வான் மிகவும் நேர்த்தியாகவும் மற்றும் அருமையான முறையில் பந்துவீசி வருகிறார். டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கக் கிடைக்கும் வாய்ப்பினை இளம் வீரர்கள் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால், டெஸ்ட் போட்டி ஒரு கடினமான பயிற்சிப் பள்ளி இதில் தேர்ச்சி பெற்றுவிட்டால் அனைத்து விதமான போட்டிகளில் சாதிக்கலாம்.

இங்கிலாந்து அணியின் வெற்றிக்கு மற்றொரு காரணம் சொந்தமண் தான். அடுத்த முறை இந்தியா வரும் இங்கிலாந்து அணி அதிக நெருக்கடிக்கு உள்ளாகும். சொந்தமண்ணில் எந்த அணியாக இருந்தாலும் வெற்றி பெறத் தான் செய்யும். இதற்கும் ஒரு சில அணிகள் விதிவிலக்கு தான் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## டெஸ்டில் எப்படி ஆடுவது ட்ராவிட் முன்னுதாரணம்



(லண்டன்)

இன்றைய இளம் கிரிக்கெட் வீரர்கள் டெஸ்ட் போட்டியில் எப்படி ஆட வேண்டும் என்பதை ட்ராவிட்டிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என இங்கிலாநது அணியின் முன்னாள் அணித் தலைவர் நாசீர் ஹுசைன் தெரிவித்தார்.

ராகுல் ராவிட்டின் மன உறுதி வியப்பை அளிக்கிறது. எந்தச் சூழ்நிலையில் களம் இறங்கினாலும் சிறப்பாக ஆடுகிறார். டெஸ்ட் போட்டியில் எப்படி விளையாட வேண்டும் என்பதை அவரிடமிருந்து கற்றுக் கொள்ளலாம். இந்திய அணிக்காக தனி ஒருவராகப் போராடும் அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும் என்றும் அவர் தெரிவித்தார்.



சின்னினாட்டி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் இரட்டையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற இந்தியாவின் லியாண்டர் பயஸ் - மகேஷ் பூபதி ஜோடி வெற்றிப்பூரிப்புடன் காட்சி தருவதைக் காணலாம்.

## நட்புறவு கால்பந்து டிரினிடாட் வெற்றி

(போர்ட் ஆப் ஸ்பெயின்)

டிரினிடாட் அன்டு டொபாகோ அணிக்கு எதிரான நட்பு ரீதியிலான பயிற்சிப் போட்டியில் இந்திய அணி 0-3 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்தது.

கரீபிய சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய கால்பந்து அணி, நட்பு ரீதியிலான மூன்று பயிற்சிப் போட்டியில் பங்கேற்கிறது. பார்படாஸ் அணிக்கு எதிரான போட்டி ரத்துச் செய்யப்பட்டது.

நேற்று முன்தினம் நடந்த இரண்டாவது போட்டியில் டிரினிடாட் அன்டு டொபாகோ அணியை எதிர்கொண்டது. இதில் அபாரமாக ஆடிய டிரினிடாட் அன்டு டொபாகோ அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. டிரினிடாட் அன்டு டொபாகோ அணி சார்பில் ஸ்டெர்ன் ஜான் (19ஆவது நிமிடம்), டேரியல் ராபர்ட்ஸ் (47, 85ஆவது நிமிடம்) கோல் அடித்தனர்.

மூன்றாவது போட்டியில் இந்திய அணி, கயானா அணியை எதிர்கொள்கிறது

## அணிகள் அறிவிப்பு

CHAMPIONS LEAGUE TWENTY 20

(மெல்போர்ல்)

சம்பியன்ஸ் லீக் ருவென்ரி 20 தொடரில் பங்கேற்கும், சென்னை, மும்பை உட்பட 11 அணிகள் அறிவிக்கப்பட்டன.

அடுத்த மாதம் 23 திகதி முதல் ஒக்டோபர் 9ஆம் திகதி வரை சம்பியன் லீக் ருவென்ரி 20 தொடர் இந்தியாவில் நடைபெறவுள்ளது.

இதில் மொத்தம் 10 அணிகள் பங்கேற்கின்றன. இதற்கான 7 அணிகள் தேர்வாகி விட்டன. மீதமுள்ள 3 அணிகள், அடுத்த மாதம் 19, 21ஆம் திகதிகளுக்குள் நடக்கும் தகுதிச் சுற்றின் அடிப்படையில் முடிவாகும். இதில் கொல்கத்தா, டிரினிடாட் உட்பட 6 அணிகள் பங்கேற்கவுள்ளன.

இதற்கான 11 அணிகளின் வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள இரு இங்கிலாந்து அணிகள் எதிர்வரும் 27ஆம் திகதி அறிவிக்கப்படுகிறது. இதில் பொலிஞ்சர், பிரட் லீ, ஹாடின் ஆகியோர் தங்களது ஐ.பி.எல்., அணிக்காக விளையாட முடிவு செய்துள்ளனர்.

இதேபோல, நியூ சவுத் வேல்ஸ், வாரியர்ஸ் அணிகளின் கலிஸ், ஜேக்கப்ஸ் இருவரும் கொல்கத்தா, மும்பை அணிக்காக விளையாடுகின்றனர். டிரினிடாட் அணியின் போலார்ட், டுவைன் பிராவோ ஆகியோர் மும்பை, சென்னை அணிக்காக விளையாட உள்ளனர்.

## காயத்திலிருந்து விரைவில் மீளுவேன்



(சின்சினாட்டி)

சின்சினாட்டி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடி முடிக்காதது மிகுந்த ஏமாற்றத்தைத் தந்தது. இருப்பினும் அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் தொடருக்கு முன் காயத்திலிருந்து மீண்டுவிடுவேன் என சேர்பியாவின் ஜோகோவிச் தெரிவித்தார்.

விளையாட்டில் வீரர்கள் காயமடைவது சகஜமான ஒன்றுதான். தொடர்ச்சியாகப் பல போட்டிகளில் விளையாடி வருவதால் சற்று சோர்வடைந்துள்ளேன். எனினும், கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்கன் ஓப்பன் ரென்னிஸ் தொடருக்கு முன் முழு உடல்தகுதியுடன் தயாராகி விடுவேன் என நம்புகிறேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சேவாக், சர்மா நீக்கம்

### உறுதிப்படுத்துகிறார் சீனிவாசன்

(புதுடில்லி)

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடருக்கான இந்திய அணியில் இருந்து காயம் காரணமாக சேவாக், இஷாந்த் ஷர்மா ஆகியோர் நீக்கப்பட்டு அவர்களுக்குப் பதிலாக அஜின்யா ரஹானே, வருண் ஆரோன் சேர்க்கப்பட்டுள்ளனர் என இந்திய கிரிக்கெட் சபைச் செயலாளர் என்.சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடருக்கான இந்திய அணியில் இருந்து சேவாக், இசாந்த் ஷர்மா ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர். சேவாக்குக்கு இடது காதில் தொற்று நோய் ஏற்பட்டுள்ளது. அவருக்குச் சிறப்பு டாக்டர் சிகிச்சை அளித்துள்ளார். முழுமையாகக் குணமடைய இன்னும் 2 வாரம் ஆகும் என்று டாக்டர் தெரிவித்துள்ளார். அறுவைச் சிகிச்சை செய்த சேவாக்கின் வலது தோள்பட்டைக் காயத்தில் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. இருப்பினும் பந்து வீச்சு மற்றும் பந்தை எறியும் வகையில் அவரது தோள்பட்ட வலிமை பெறுவதற்காக சிகிச்சைகள் தொடரும். இசாந்த் ஷர்மாவுக்கு இடது கணுக்காலில் காயம் ஏற்பட்டது பர்மிங்காம் டெஸ்ட் போட்டியின் போது தெரியவந்தது. அவருக்கும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட வேண்டியுள்ளது.எனவும் அவர் தெரிவித்தார்.



இலங்கை அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை 3-2 என்ற கணக்கில் கைபற்றிக் கொண்ட அவுஸ்ரேலிய அணி கிண்ணத்துடன் காட்சி தருவதைக் காணலாம்.

ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியிருப்பது மிகுந்த நம்பிக்கையைத் தருவதாகவும், அடுத்து வரும் டெஸ்ட் தொடரை வெல்வதற்கான உத்வேகமாகவும் இது அமையும் என்று அவுஸ்ரேலிய அணியின் தலைவர் கிளார்க் தெரிவித்தார்.

## யாழ்.பல்கலைக்கழக அபிவிருத்திக்கு இந்தியா 4 மில்லியன் டொலர் நன்கொடை

(கொழும்பு)

யாழ் பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் பொறியியற் பீடங்களின் அபிவிருத்தித் தொடர்பில் நன்கொடைகளை வழங்க இந்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. இந்தத் தகவலை உயர் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஜயந்த நவரத்ன நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளார்.

உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி திசாநாயக்கவிற்கும் இந்திய உயர் ஆணையாளர் அசோக் கே.காந்தாவிற்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதற்காக நான்கு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு அசோக் கே.காந்தா இணக்கம் தெரிவித்துள்ளதாக செயலாளர் மேலும் தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கான புதிய 2 விடுதிகள் நிர்மாணிக்கவும், இந்தியாவிற்கும் இலங்கைக்குமான உயர் கல்விப் பரிமாற்றத் திட்டம் மற்றும் பல்கலைக்கழக தங்கும் விடுதிகள் தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பிலும் இக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது என உயர்கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

## நாடு முழுவதும் விழிப்புக் குழுக்களை அமைக்க ஜனாதிபதி அனுமதி

(கொழும்பு)

நாடு முழுவதிலும் விழிப்புக் குழுக்களை அமைக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அனுமதி வழங்கியுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டத்தில் தன்னால் முன்வைக்கப்பட்ட பிரேரணையையடுத்தே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த அனுமதியை வழங்கியதாக அவர் குறிப்பிட்டார்.

கிறீஸ் மனிதர்களின் நடமாட்டத்தையடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையைப் போக்குவதற்காக அமைக்கப்படவுள்ள இக்குழு பொலிஸாருடன் சேர்ந்து செயற்படவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த விழிப்புக் குழுக்களுக்கு அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் தலைமை வகிப்பார்கள் என பைசால் காசீம் மேலும் குறிப்பிட்டார்.

## கடமைகளில் இருந்து இராணுவத்தினர் வாபஸ்

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினரை வாபஸ் பெறுவதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. இராணுவத்தினருக்குப் பதிலாக பொலிஸாரும் விசேட அதிரடிப் படையினரும் மாவட்டத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபரும் அம்பாறை மாவட்ட பதில் பொலிஸ் மாஅதிபருமான திலக் விஜயகுணவர்தன தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பொது மக்களின் கோரிக்கைக்கு அமையவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.இந்தக் கூட்டத்தில் மாவட்டத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உட்பட பல உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# வடக்கு கிழக்கு சுற்றுலா மையங்கள் வெளிநாட்டுத்தரத்தில் புனரமைக்கப்படும்

## பிரதியமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கு கிழக்கிலுள்ள சுற்றுலாத்துறை மையங்கள் நவீன வசதிகளுடன் மிகவும் கவர்ச்சிகரமாக உல்லாசப்பயணிகளைக் கவரும் விதத்தில் வெளிநாடுகளின் தரத்தில் புனரமைக்கப்படவுள்ளதாக பொருளாதாரப் பிரதியமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுற்றுலாத்துறை மூலம் இலங்கை அதிக வருமானத்தை ஈட்டி வருகிறது இத்துறையினை பிரதான வருமான மார்க்கமாக மாற்றி அமைக்கும் வேலைத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 5 வருடங்களில் அனைத்து வசதிகளையும் கொண்ட வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவரும் ஒரு துறையாக இதனை செயற்படுத்தவுள்ளோம்.

வடக்கு கிழக்கிலுள்ள உல்லாசச் சுற்றுலாத்துறை இடங்கள் மலேசியா, மாலைதீவு, தாய்லாந்து நாடுகளில் உள்ளதைப் போன்று மிகவும் நவீனமாக கவர்ச்சிகரமான விதத்தில் புனரமைக்கப்படவுள்ளன என்றும் தெரிவித்தார்.

## மேஜர் ஜெனரல் லால் பெரேரா கிழக்குத் தளபதியாக நியமனம்



(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்தின் கிழக்குப் படைத் தலைமையகத் தளபதியாக மேஜர் ஜெனரல் லால் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார். வெலிக்கந்தையில் உள்ள கிழக்குப் படைகளின் தலைமையகத்தில் இவர் நேற்றுமுன்தினம் தனது பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்குப் படைகளின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா,சீனாவின் தேசிய பாதுகாப்புக் கல்லூரியில் உயர்கல்விக்காகச் செல்லவுள்ளார். இதையடுத்தே புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் லால் பெரேரா நியமிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் கிழக்குப் பகுதிகளில், மர்மமனிதர் விவகாரத்தைப் பயன்படுத்தி பொதுமக்கள் மீது பாதுகாப்புக் கெடுபிடிகளை அதிகரிப்பதற்கு மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா நடவடிக்கை எடுத்திருந்தார். கிழக்குப் பகுதிப் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய கடந்த வாரம் வெலிக்கந்தை சென்றிருந்த இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேரா வீரவாள் ஒன்றைக் கொடுத்து விடைபெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிவேக வீதியில் விபத்துக்குள்ளாவோரை காப்பாற்ற பொலிஸாருக்கு விசேட பயிற்சி

(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் விபத்துக்குள்ளாவோரைக் க்காப்பாற்றுவது தொடர்பாக பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு பயிற்சியளிக்கப்பட்டுவருகின்றது.

அதிவேக வீதியில் விபத்துக்குள்ளாவோரின் உயிர்களைப் பாதுகாப்பதற்கு உடனடியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது கூடுதல் கவனம் செலுத்தப்படுவதாக தீயணைப்பு சேவைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கட்டம் கட்டமாக இந்தப் பயிற்சிகளை வழங்க உத்தேசித்துள்ளதாக திணைக்களத்தின் பிரதம தீயணைப்பு சேவைகள் அதிகாரி ரோஹித் பெர்ணான்டோ கூறியுள்ளார். முதற்கட்டமாக 44 அதிகாரிகள் இந்தப் பயிற்சித் திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கையடக்க தொலைபேசியில் யுவதிக்கு ஆபாசப்படம் காட்டியவருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டிக்கு அருகில் பேருந்தில் பயணம் செய்த யுவதியொருவருக்கு கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப் படங்களைக் காண்பித்ததாக கூறப்படும் நபர் ஒருவரை செப்டெம்பர் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.


20-30 வயதுக்கிடைப்பட்ட அப்பெண் கொள்ளுப்பிட்டி பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டின் படி அப்பெண் தனியார் பேருந்து ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த போது அருகிலுள்ள ஆசனதில் அமர்ந்த நபர் ஒருவர், அப்பெண்ணை பாலியல் ரீதியில் தொந்தரவு செய்துள்ளார். முறையற்ற வகையில் அப்பெண்ணின் உடலில் கை வைத்துள்ளார். இதற்கு அப்பெண் ஆட்சேபம் தெரிவித்தபோது அந்நபர் தனது கையடக்கத் தொலைபேசியிலிருந்து ஆபாச வீடியோவொன்றைக் பெண்ணிடம் காண்பித்துள்ளார்.

இது தொடர்பாக பேருந்து நடத்துநரிடமும் சாரதியிடமும் அப்பெண் புகார் செய்ததையடுத்து. அவர்கள் சந்தேக நபருடன் சேர்த்து பேருந்தைப் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர். இச் சந்தேக நபர் மாத்தறையைச் சேர்ந்த மேசன் தொழிலாளி எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீதிவான் திருமதி லங்கா ஜயரட்ன முன்னிலையில் இவ்வழக்கு விசாரணைக்கு வந்தபோது சந்தேக நபரின் கைத் தொலைபேசியிலிருந்து 11 ஆபாச வீடியோக்களைக் கண்டுபிடித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பாரதூரமான குற்றமொன்றை இழைத்திருப்பதாகக் கூறப்படுவதைக் கருத்திற்கொண்ட நீதிவான், சந்தேக நபரை செப்டெம்பர் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## இலங்கையின் தேசிய மலர் குறித்து ஆய்வு செய்வதற்கு குழு நியமனம்



(கொழும்பு)

தேசிய மலர் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள குழுவொன்றை அமைத்துள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது நாட்டில் பயன்படுத்தப்படும் தேசிய மலர் தொடர்பில் ஆய்வாளர்கள் மற்றும் நிபுணர்கள் முன்வைத்துள்ள விடயங்கள் குறித்து கவனம் செலுத்துவதற்காக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச்.எஸ் சமரதுங்க குறிப்பிட்டுள்ளார். இந்தக் குழுவில் நாட்டிலுள்ள தாவரவியல் நிபுணர்கள் சிலரும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் சரியான தேசிய மலர் எதுவென ஆய்வு மேற்கொள்ளப்படுவதுடன்,அது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள புகைப்படங்கள் மீண்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன.

இதன் ஆய்வறிக்கையை சுற்றாடல் அமைச்சரின் ஊடாக அமைச்சரவையிடம் சமர்ப்பிப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். 1988ஆம் ஆண்டில் இலங்கையின் தேசிய மலராக நீலோற்ப மலர் பெயரிடப்பட்டபோது ஏற்பட்ட குறைபாடுகள் காரணமாக இந்தப் பிரச்சினை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## செலான் வங்கியின் பரிசு மாணவி பாங்கொக் பயணம்

(கொழும்பு)

செலான் வங்கியின் டிக்கிரி கணக்கில் சேமிப்பினை மேற்கொண்டவர்களுக்கு நடத்தப்பட்ட அதிஸ்ட இலாபச் சீட்டிலுப்பில் வெற்றிபெற்ற யாழ்.வல்வெட்டித்துறை மாணவி ஒருவர் குடும்பத்துடன் பாங்கொக் பயணம் செய்யவுள்ளார்.

கரம்பியோடை வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நிசாந்தன் அலெக்ஸ்ரா என்பவரே இந்தப்பரிசினை பெற்றுள்ளார்.

அடுத்தமாதம் முதல்வாரத்தில் அவர்கள் தமது பயணத்தினை தொடரவுள்ளனர்.




ஆசிரியர்,
திரு.
T.S.குகன்
கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியில் உள்ள ஆசிரியர்களில் ஒருவர்

# க.பொ.த. சா/த பரீட்சை - 2011

நேரம்: 1 மணித்தியாலம்

# கல்வி முரசு O/L

## தமிழ்மொழியும் இலக்கியமும் - பகுதி I



யாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாக்களுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. "குற்றம் கடிதல் வடு அன்று" இங்கு வடு என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
    1) மலை 2) வாட்டம் 3) குற்றம் 4) சரி
02. "காரென்று பேர் படைத்தாய் ககனத்துறும்போது" ககனம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்.
    1) கானகம் 2) தரை 3) ஆகாயம் 4) கடல்
03. "வெந்தழலால் வேகாது" இங்கு தழல் என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
    1) நீர் 2) விறகு 3) அடுப்பு 4) நெருப்பு
04. "எமது புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவப் படுத்தப்பட்டனர்" கௌரவம் என்பதன் எதிர்க் கருத்துச் சொல்.
    1) கௌரவம் 2) மரியாதை 3) இழிவு 4) அவமரியாதை
05. தமிழன் என்ற ஆண்பாற் சொல்லுக்குரிய பெண்பாற் சொல்.
    1) தமிழிச்சி 2) தமிழி 3) தமிழினி 4) தமிழிச்சை

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தாம் வெற்றி பெறுவதற்காக மக்கள் மத்தியில் தங்கள் கொள்கைகளை,
    1) விண்ணப்பம் செய்வார்கள் 2) தெளிவுபடுத்துவார்கள்
    3) கோரிக்கை வைப்பார்கள் 4) பிரசாரம் செய்வார்கள்
07. அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் சேர்ந்த பண்பு.
    1) சால்பு 2) நல்லொழுக்கம்
    3) நற்பண்பு 4) பழக்கவழக்கம்
08. பின்வருவனவற்றுள் கிழக்குக் கிளைமொழியாக அமைவது
    1) பெத்தவள் 2) மறுகா
    3) சல்லி 4) புள்ளே
09. இத்தாலிக்குச் சென்ற குமாருக்குப் பத்து வருடமாகியும் சிற்றிசன் கிடைக்க வில்லை. சிற்றிசன் என்பதன் தமிழ்ச் சொல்,
    1) பிரஜாவுரிமை 2) சான்றிதழ்
    3) கடவுச்சீட்டு 4) ஆளடையாளஅட்டை
10. யானையின் இளமைப் பெயர்.
    1) குருளை 2) கன்று
    3) பறள் 4) போதகம்
11. பின்வருவனவற்றுள் ரீங்காரம் செய்வது
    1) வண்டு 2) தேனீ
    3) ஆந்தை 4) மயில்
12. ஓய்வின்றி அல்லும் பகலும் விடாது உழைக்கும் நிலையை உணர்த்தும் அருஞ்சொற்றொடர்.
    1) நெற்றி வியர்வை நிலத்திற்சேர
    2) நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்
    3) விரிகதிர்ச் செல்வன்
    4) சாதுரியமாகவும் மாதுரியமாகவும்
13. பின்வருவனவற்றுள் உருவக அணியாக அமைவது.
    1) கல்விக் கடல் 2) மதிமுகம்
    3) பவளவாய் 4) கடற்கல்வி
14. கல், பறவை, விலங்கு, சிங்கம் முறையே
    1) இடுகுறிப்பெயர், காரணப்பெயர், பொதுப்பெயர், சிறப்புப்பெயர்
    2) காரணப்பெயர், இடுகுறிப்பெயர், முவிடப்பெயர், தன்மைப்பெயர்
    3) முன்னிலைப்பெயர், அஃறிணைப்பெயர், உயர்திணைப்பெயர், பாற்பொதுப்பெயர்
    4) சிறப்புப்பெயர், இடுகுறிப்பெயர், காரணப்பெயர், சிறப்புப்பெயர்
15. நல்ல மனிதன் வேகமாக ஓடியது. சிறிய கண்கள் என்பவற்றுள் பெயரடைகளாக அமைவன.
    1) ஓடியது, சிறியது 2) நல்ல, சிறிய
    3) நல்ல, வேகமாக 4) மனிதன், கண்கள்

**பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

16. வெளிப்படையாகக் கேட்டல் எனும் பொருள் தரும் மரபுத் தொடர்
    1) செவிசாய்தல் 2) வாய்விட்டழுதல்
    3) செவிப்படுத்தல் 4) செவியறிவுறுத்தல்
17. கையறுத்தல் எனும் மரபுத் தொடர் தரும் பொருள்.
    1) வருந்துதல் 2) நட்டமடைதல்
    3) விட்டுவிலகல் 4) கைவிட்டுச் செல்லல்
18. கால்சாய்த்தல் என்ற மரபுத் தொடரின் கருத்து
    1) ஓடுதல் 2) கெடுதல்
    3) தடைப்படல் 4) தொடர்ந்து பற்றுதல்
19. ஒன்றைப் பல நாட்களாக எதிர்பார்த்திருந்து ஏமாற்றமடைவதை உணர்த்தும் உவமைத் தொடர்.
    1) கரும்பிருக்க இரும்பு கடித்தாற் போல
    2) கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல
    3) இலவு காத்த கிளி போல
    4) தேடிய பூண்டு காலில் மிதிபட்டது போல
20. அச்சமின்றி உண்மை கூறுவோன் பலரது வெறுப்புக்கும் ஆளாவான் என்ற கருத்தைத் தரும் பழமொழி.
    1) அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்
    2) தன் குற்றம் தனக்கே தெரியும்
    3) யதார்த்தவாதி வெகுசன விரோதி
    4) குற்றம் பார்க்கின் சுற்றமில்லை
21. பின்வருவனவற்றுள் பெயர்ப்பகாப்பதமாக அமைவது
    1) உண் 2) நனி 3) மரம் 4) மற்று
22. இரு பெயர்ச் சொல்கள் இணைந்து அடைந்த கூட்டுப் பெயராக அமைவது
    1) தொலைக்காட்சி 2) நிரேரி 3) கட்டுரை 4) எழுதுகோல்
23. கத்தியால் வெட்டினான் என்பதில் ஆல் உருவு ஏற்கும் பொருள்
    1) அடைதல் 2) உடைமை 3) கருத்தா 4) கருவி
24. பின்வருவனவற்றுள் தொகா நிலைத் தொடராக அமைவது
    1) பவளவாய் 2) விரிகதிர்
    3) குடம் வனைந்தான் 4) குடத்தை வனைந்தான்
25. நீங்கள் நீடூழி வாழ்க என்பது
    1) முன்னிலை ஒருமை வினைமுற்று
    2) முன்னிலை பன்மை வினைமுற்று
    3) வியங்கோள் வினைமுற்று
    4) தெரிநிலை வினைமுற்று
26. யுத்தத்தில் பெற்றோரை இழந்தவனை கருணை உள்ளம் கொண்டோர் ஆதரித்தனர். இங்கு இழந்தவனை என்பது.
    1) வினைச்சொல் 2) தெரிநிலை வினை
    3) குறிப்பு வினை 4) வினையாலணையும் பெயர்
27. கடிமாலை என்பதில் கடி எனும் உரிச்சொல் ஏற்றுள்ள பொருள்.
    1) விரைவு 2) கூர்மை 3) காவல் 4) வாசணை
28. வல்லினம் மிகுந்து புணரும் சொல்
    1) வாய்சொல் 2) முள்செடி 3) செய்நன்றி 4) சூல் கள்
29. பின்வருவனவற்றுள் எழுத்துப் பிழையின்றி எழுதப்பட்ட வாக்கியம்.
    1) கல்வியில் அக்கரை இல்லாதிருந்த மானவனுக்கு ஆசிரியர் ஆலோசனை கூறினார்.
    2) கல்வியில் அக்கறை இல்லாதிருந்த மாணவனுக்கு ஆசிரியர் ஆலோசனை கூறினார்.
    3) கல்வியில் அக்களை இல்லாதிருந்த மாணவனுக்கு ஆசிரியர் ஆலோசனை கூறினார்.
    4) கல்வியில் அக்கறை இல்லாதிருந்த மாணவனுக்கு ஆசிரியர் ஆலோசணை கூறினார்.
30. இல் என்னும் உருபைக் கொண்ட வேற்றுமைகள்
    1) 7உம், 6உம் 2) 4உம், 6உம் 3) 5உம், 2உம் 4) 5உம், 7உம
31. பின்வரும் பாடல்களின் பிரதான கருத்தைத் தெரிவு செய்க.

    வையகத்தில் ஏழைகளும்
    மானிடராய்ப் பிறந்து விட்டோம்
    உய்யவழி தேடுகின்றோம்
    உதவி செய்ய வேண்டும் ஐயா!

    1) ஏழைகளாய் பிறந்தவர்கள் பாவம் செய்தவர்கள்.
    2) ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும்.
    3) ஏழைகளாய் பிறந்த மானிடர் தாம் வாழ் இறைவனை வேண்டுதல்
    4) உலகில் ஏழை மானிடரும் உள்ளனர்
32. நாள் முழுவதும் பாடுபடுவார்கள் ஓயார்
    நன்று புரிவார். இரங்கு வார்கள்
    ஆதரிப்பார், போய் உதவுவார்கள் ஊரார்கள். இப்பாடலின் கருத்து
    1) கிராமத்தவரின் நற்பண்புகள்
    2) கிராமத்தவர்களின் உழைப்பும், உதவுதலும்
    3) கிராமத்தவர் பிறர்மீது இரக்கம் கொள்ளார்கள்
    4) கிராமத்தவர் எப்போதும் நன்மையே செய்வார்கள்

**பின்வரும் வினாக்களிலுள்ள வாக்கியத்தின் முற்பகுதிக்கு மிகப்பொருத்தமான பிற்பகுதியைத் தெரிவு செய்க.**

33. நீயோ அவனோ யார் இதைக்
    1) கொடுத்தாய் 2) கொடுத்தான்
    3) கொடுத்தார் 4) கொடுத்ீர்கள்

34. விமலினியா கமலனா அங்கே நிற்பவர் என்னும் வினாவிற்குரிய விடை
    1) அங்கே நிற்பவள் கமலன் அல்லள், விமலினி
    2) அங்கே நிற்பவர் கமலன் அல்லன், விமலினி
    3) அங்கே நிற்பவன் கமலன் அல்லன், விமலினி
    4) அங்கே நிற்பது கமலன் அல்லன், விமலினி

35. அழகை அனுபவிப்பதற்காக மதிநுட்பமும், நூற் பயிற்சியும்
    1) இன்றியமையாததல்ல
    2) இன்றியமையாததன்று
    3) இன்றியமையாதவையன்று
    4) இன்றியமையாதவையல்ல

**கீறிட்ட இங்களுக்குரிய மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

36. இராமன் வெளிநாட்டிலிருக்கும் தனது மாமனாருக்கு ........................ மூலம் அவசர செய்தியொன்றை அனுப்பினார்.
    1) மின்னஞ்சல் 2) இணையம் 3) தொலைநகர் 4) கணினி

37. அரசாங்க ஆட்சேர்ப்பு விபரங்கள் ........................ இல் வெளிவரும்
    1) வர்த்தமானி 2) பத்திரிகை 3) விஞ்ஞாபனம் 4) கன்சாட்

38. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் ................ வழங்கியது
    1) நஷ்டஈடு 2) கடன் 3) உதவி 4) இழப்பீடு

39. 2008ஆம் ஆண்டு வெளியேறிய பட்டதாரிகளை அரச சேவையில் உள்ளீர்ப்பதற்கான விபரங்களை அரசாங்கம் ........................ வெளியிட்டது
    1) வர்த்தமானியில் 2) பத்திரிகையில்
    3) சஞ்சிகையில் 4) பாடநூலில்

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுகின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்கு பெற வைப்பதால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அவ்வாறு பந்தியை அமைத்து மிகப்பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.
    அ) அன்னம் பற்றிய உவமையோ, விரிந்த காட்சிப் பொருளாகவே நின்று விடுகிறது.
    ஆ) இது கருத்துப் பொருள்
    இ) உவமைக்கும், உருவகத்திற்கும் உள்ள வேறுபாட்டினை இப்பாடலில் கண்டு தெளியலாம்.
    ஈ) காட்சிப் பொருள் கருத்துப் பொருளாகுவது உணர்விலே
    உ) வழித்தாமரை பூத்த மண்டபம் வழிகளாகிய மலர்கள் விரிந்துள்ள . வாலி ஆகிவிடுகிறது.
    1) அ, ஆ, ஈ, ஆ, அ
    2) ஆ, ஈ, உ, இ, அ
    3) இ, உ, ஆ, ஈ, அ
    4) ஈ, ஆ, உ, இ, அ

## தமிழ்மொழியும் இலக்கியமும் - பகுதி II

நேரம் : 2 மணித்தியாலம்

**1) சுருக்கமான விடை எழுதுக.**

01. பின்வரும் தொடரைப் பிரித்து எழுதுக.
    பாய்தட்டிழைக்கப்பழகிக்கொண்டாள்

02. வளமான பூமியை மனிதன் தன் தவறான செயற்பாடுகளால் விரைவாக அழிக்கின்றான். இவ்வாக்கியத்தில் இடம்பெறும் பெயரடை, வினையடைகளைத் தருக?

03. பின்வரும் இணைமொழிகளைக் கொண்டு வாக்கியங்கள் எழுதுக.
    கட்டுக்காவல், கங்குகரை

04. ஒரு பொருளின் தன்மையை மிதமிஞ்சி உயர்த்திக் கூறும் பண்புடைய அணியின் பெயர் என்ன?

05. நன்னூல், வெண்டாமரை எனும் சொற்களைப் பிரித்தெழுதுக.

06. அறிக்கை எழுதுவதற்குத் தேவையான தகவல்களைத் திரட்டுவதற்காக நீர்மேற்கொள்ளும் முறைகள் 2 தருக.

07. நீர் உற்பத்தி செய்த பழப்பாகுவினை விளம்பரப்படுத்துவதாயின் உமது விளம்பரத்தில் இடம்பெற வேண்டிய முக்கிய பண்புகள் 2 தருக.

08. அழைப்பிதழின் வகைகளை எழுதி இரண்டிற்குமான ஒற்றுமை ஒன்று தருக.

09. சுவரொட்டிக்கும், துண்டுப்பிரசுரத்திற்குமான வேறுபாடுகளைத் தருக.

10. ஒரு சிறுகதைக்கு இருக்க வேண்டிய பண்புகள் 2 தருக.

**02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவுசெய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு கட்டுரை எழுதுக. நீங்கள் தெரிவுசெய்த விடயத்துக்குப் பொருத்தமான தலையங்கம் எழுதுக.**

01. வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக் காரணமாக இன்று குடும்பத்தில் ஆண், பெண் இருவருமே வேலைக்குச் செல்ல வேண்டிய நிலையில் உள்ளனர். இதனால் வீட்டில் வயது சென்ற தமது பெற்றோரைச் சரியாகக் கவனிக்க முடியாத நிலைக்கு ஆளாகின்றனர். சிலர் சுயநோக்கத்துடன் வாழ்வதற்காகத் தமது பெற்றோர்ரைக் கவனிக்க விருப்பமின்றியுள்ளனர். இதன் காரணமாக முதியோர் இல்லங்கள் பெருகிக்கொண்டு செல்கின்றன. பெருகும் முதியோர் இல்லங்களைத் தடுப்போம் என்ற தலைப்பில் ஒரு விளக்கக் கட்டுரை.

02. தற்போது தொலைக்காட்சியில் தொடர்நாடக நிகழ்ச்சிகள் அதிகரித்துச் செல்கின்றன. மொழியை மேம்படுத்த உதவும் தன்மை ஊடகங்களுக்கு உண்டு. ஆகவே சில நாடகங்கள் மனித மொழியை மேம்படுத்துகிறது எனவும் கூறலாம். அவற்றைக் கருத்திற்கொண்டு இருவருக்கிடையே ஓர் உரையாடல்.

03. உமது பாடசாலையில் ஓர் கல்வச் சுற்றுலா ஒன்றினை மேற்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதன்படி குறித்த நாளில் குறித்த இடங்களுக்குச் சுற்றுலா மேற்கொள்ளப்பட்டது. அச்சுற்றுலா உமது கல்வி நடவடிக்கைக்குப் பெருந் துணையாக இருந்தது. இக்கருத்துக்களை உள்ளடக்கி சுற்றுலா பற்றிய ஒரு விவரணம்.

04. அவன் அவ்வூரில் பெருஞ் செல்வந்தனாக விளங்கினான். உலோபத்தனம் இல்லாது தன்னிடம் உதவி கேட்டு வருவோரின் தேவையறிந்து உதவி புரிபவன். திடீரென அவனுக்கும் சோதனைகள் சூழத்தொடங்கியது. இதனால் அவனது வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட பல்வேறு துன்பங்களைச் சந்தித்தான். ஆனால் தனது உதவி புரியும் தன்மையைக் கைவிடவில்லை. தர்மம் தலைகாக்கும் எனும் கருப்பொருள் புலப்படும் வகையில் ஒரு சிறுகதை.

**கீழே தரப்பட்டுள்ள உரைப் பகுதியின் சுருக்கத்தை 40-45 சொற்களில் அமையக் கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக)**

இன்றைய காலகட்டத்தில் தொடர்பாடல் என்பது மிகப் பிரபல்யமானதும் அவசியமானதுமான ஒரு செயற்பாடாகிவிட்டது. இன்று முழு உலகுமே ஒரு கிராமம் என்ற வகையில் சுருங்கிவிட்டமைக்கும், நெருங்கிவிட்டமைக்கும் இத்தொடர்பாடல் விருத்தியே அடிப்படைக் காரணமாகிவிட்டது எனலாம்.

பழமைமிக்க தொடர்பாடல் முறையான கடிதம் முதல் தொலைபேசி, தொலைநகல் (பக்ஸ்), தொலைப்பதிவு (அடலக்ஸ்), இலத்திரனியல் தபால் (ஈமெயில்) போன்ற பல்வேறு ஊடகங்களும் அகில உலகத்தையுமே ஆட்டிப் படைக்கின்றன.

மேற்கூறப்பட்ட பல்வேறு வகையான சாதனங்களும் தோற்றம் பெற்றுவிட்ட போதும் மனிதப் பண்பும் நேயமும் மிக்க நேரடித் தொடர்பானது எல்லாவற்றிலும் மேலானது என்று கூறலாம். உயர்ந்த அறிவும் விஞ்ஞானத்தில் வியத்த சாதனைப் போக்கும் மிக்க மனிதன் தனது நாளாந்த தொடர்பாடலை பண்புடனும் சிறப்புடனும் மேற்கொண்டு ஊடாடும், உறவாடும் தன்மைகளைத் தன்னுள் வளர்த்துக்கொள்ளல் மிக அவசியமாகும்.

எமது நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் பல்வேறு சந்தர்ப்பங்களின்போதும், தேவைகளின் போதும் நாம் பல்வேறு வகைப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அத்தகைய தொடர்பாடல் ஆனது பல்வேறு மட்டங்களிலும் இடம்பெறக்கூடும்.

வயதில் கூடியோருடனோ குறைந்தோருடனோ சம வயது உடையோருடனாகவும் இருக்கலாம். நம்மைவிட அறிவிலும், ஆற்றலிலும், கல்வியிலும், செல்வத்திலும், சிறப்பு பெற்றவர்களுடனாகவும் இருக்கலாம். நமது நாட்டவர்களுடனும் நாம் தொடர்பாடல் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் நிகழ்காலத்தில் மட்டுமன்றி, வருங்காலத்திலும் ஏற்படலாம். இதற்கு இசைவாக நாம் தொடர்பாடலைத் திறன்பட மேற்கொள்ளும் ஆற்றல் பண்பு என்பனவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

**4) பின்வரும் புதுக்கவிதைகளை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பூரணமான வாக்கியங்களில் விடை எழுதுக.**

மண் மனிதனுக்குப் புதைகுழி
மரத்திற்கோ கருவறை
மரங்கள் சாய்ந்தால்
காட்டிலிருந்து வீட்டிற்கு வரும்
மனிதன் சாய்ந்தால்
வீட்டிலிருந்து காட்டுக்குப் போகிறான்!

மரம் புழுதியில் பூக்களையும்
கழிவு நீரில் கனிகளையும் தருகிறது
மனிதன் பூக்களில் புழுதியையும்
கண்களில் கழிவு நீரையும் செய்கிறான்
மரம் மனிதனுக்கு ஒரே சிபி ஒரே சீதக்காதி
மரங்களில் எல்லாமே சிபிகள், சீதக்காதிகள்
மரம் கொடுப்பதற்காகவே . கைகளை நீட்டுகிறது
மனிதன் வாங்குவதற்காகவே
கைகளை நீட்டுகிறான்.

01. "மண் மனிதனுக்குப் புதைகுழி, மரத்திற்கோ கருவறை" என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

02. மரங்கள் அழிந்தால், மனிதன் அழிந்தால் நடைபெறும் செயற்பாடுகள் எவை எனக் கவிஞர் கூறுகின்றார்?

03. இங்கு குறிப்பிடும் இரண்டு கொடைவள்ளல்களும் யாவர்?

04. இப்புதுக் கவிதை மூலம் கவிஞர் மனிதருக்கு கூறும் முக்கிய கருத்துக்கள் எவை?

05. மரம் மனிதனுக்கு எவற்றைத் தருகிறது?

**5)** நுளம்புகளால் பல நோய்கள் பரவுகிறது. நுளம்புகளால் பரப்பப்படும் நோய்கள் மனிதர்களுக்கிடையே உயிருக்கு அச்சுறுத்தலாக அமைகின்றன. நுளம்புப் பெருக்கத்திற்கு முக்கியமான காரணம் சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருக்காமையும், நீரைத் தேக்கி வைத்திருப்பதுமே ஆகும். ஆகவே சுற்றாடலைத் தூய்மையாகவும் நீரைத் தேக்கி வைத்திருக்காமலும் இருக்க மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பத்திரிகைக்கு ஓர் கடிதம்.

## மிகப்பெரிய யேசு சிலை

உலகின் மிகப்பெரிய யேசுநாதர் சிலை போலந்து நாட்டின் மேற்குப்பகுதியில் உள்ள சிறிய கிராமம் ஒன்றில் கடந்த வருடம் நிர்மாணிக்கப்பட்டது. சிலையின் உயரம் 167 அடி. இரு நாட்களில் கட்டி முடிக்கப்பட்டது. காலநிலை சாதகமாக அமைந்து இருந்திருந்தால் ஒரு நாளில் நிர்மாணித்து இருக்க முடியும் என்று நம்பப்படுகின்றது.



## 5 ஆயிரம் கிலோமீற்றர் பறந்த குயில்கள்



குயில்கள் இனிமையாகப் பாடும் என்றுதான் நாங்கள் இதுவரை கேள்விப்பட்டிருக்கிறோம். "குயிலைப் பிடிச்சு கூண்டில் அடைச்சு பாடச்சொலலுகிற உலகம்" என்று பிரபல சினிமாப் பாடலும் உள்ளமை யாவரும் அறிந்ததே. ஆனால் அவை நீண்ட தூரம் சளைக்காமல் பறக்கும் ஆற்றல் கொண்டவை என்று அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளன. குயில்களின் வாழ்க்கை முறை தொடர்பாக பிரித்தானியாவின் பறவையியல் ஆய்வு அறக்கட்டளை சார்பில் சமீபத்தில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. ஆய்வுக்காக 5 குயில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவற்றுக்கு Clement, Martin, Lyster, Kasper , Chris என்று செல்லமாக பெயரும் இடப்பட்டன. அவற்றின் உடலில் GPS backpacks track எனப்படும் அதிநவீன வழிகாட்டும் கருவிகள் பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டன.

இதன் மூலம் அவை 3 மாதங்களுக்குள் 5 ஆயிரம் கிலோமீற்றர்கள் தூரம் பயணித்தது தெரிய வந்துள்ளது. இதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் மேலும் கூறியதாவது GPS கருவிகள் வழிகாட்டப் பயன்படுவதோடு பயணிக்கும் தடங்கள், பயணத் தூரங்களை எளிதிலும் துல்லியமாகவும் கண்டுபிடிக்க உதவும் என்பதால் குயில்களின் உடலில் அவற்றைப் பொருத்தி ஆய்வு செய்தோம். குயில்களின் இயக்கம் முழுவதும் கம்பியூட்டர் மூலம் கண்காணிக்கப்பட்டது.

இங்கிலாந்தில் இருந்து கடந்த ஜூன் மாதம் கிளம்பிய இவை தற்போது ஆப்பிரிக்காவில் உள்ளது தெரியவந் துள்ளது. புறப்பட்டு 3 மாதங்கள்கூட நிறைவடையாத நிலையில் இவை 5 ஆயிரம் கிலோ மீற்றர்கள் தூரம் பறந்துள்ளன. குயில்கள் குறைந்த தூரம்தான் பறக்கும் என்ற கருத்தை இந்த ஆய்வு தகர்த்துப் போட்டிருக்கிறது. இதன் மூலம் குயில்கள் இனிமையாகப் பாடுவதில் மட்டுமல்ல நீண்டதூரம் பறப்பதிலும் கில்லாடிகள் எனறு நிரூபித்து விட்டன.

## முதலை வாய்கொண்ட கோழி

பொதுவாக கோழிகளுக்கு சிறிய அலகு இருக்கும். அதன் மூலம் உணவை அவை உட்கொள்கின்றன. ஆனால், ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உயிரியில் பரிணாம வளர்ச்சி விஞ்ஞானி அர்காத் அபாஷ்னேங் தலைமையிலான நிபுணர் குழுவினர் புதுவிதமாக ஆய்வு மேற்கொண்டனர். கோழிக் கருவில் உள்ள டி.என்.ஏ.மூலக் கூறில் சிறிது மாற்றம் செய்து முதலையின் நீளமான தாடை போன்ற அலகை உருவாக்கியுள்ளனர். கோழி முட்டையில் சிறிய துவாரமிட்டு அதற்குள் சிறிய பாசிமணி அளவிலான புரோட்டீனைச் செலுத்தினர். அதைத் தொடர்ந்து முட்டை கருவின் வளர்ச்சியைக் கண்காணித்தனர். 14 நாட்களுக்குப் பிறகு கோழின் அலகு முதலையின் தாடை போன்று நீளமாக வளர்ந்தது. பறவைகள் மற்றும் விலங்குகளின் உடற்கூறு இயல் குறித்து அறிய இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாக விஞ்ஞானி அபாஷ்னோவ் தெரிவித்தார். இச்சோதனையின் மூலம் குழந்தை பிறப்பில் ஏற்படும் குறைபாடுகளை நீக்க முடியும் என நம்பப்படுகிறது. இந்தச் சாதனை சுமார் 6 1/2 கோடி ஆண்டு பரிணாம வளர்ச்சி வரலாற்றில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.



## செல்லப்பிராணியாக...

பொதுவாக வீடுகளில் நாய், பூனை போன்றவற்றை செல்லப்பிராணிகளாக வளர்ப்பார்கள். ஆனால் அமெரிக்காவின் டெக்சஸ் மாநிலத்திலும், ஆதூரியா நாட்டிலும் மக்கள் ஒரு வகை எலிகளை செல்லப் பிராணிகளாக வளர்க்கின்றனர். இவை சாதாரண எலிகள் அல்ல. பன்றி அளவுக்கு வளரக் கூடியவை. இவற்றை சங்கிலிகளால் கட்டி கூட்டிச் செல்கின்றனர்.



## Facebook படங்கள் அனைத்தையும் ஒரே இடத்தில் டவுன்லோட் செய்ய

facebook இல் நீங்கள் நிறைய நண்பர்களை வைத்திருக்கிறீர்கள் என்றால் நிறைய பட அல்பங்களையும் நீங்கள் கொண்டிருக்கிறீர்கள் என்று சொல்லலாம். அது எப்படி என்றால் உங்கள் பட அல்பங்கள் உங்கள் நண்பர்களின் அல்பங்கள் என்று நூற்றுக்கணக்கான அல்பங்களை நீங்கள் பார்க்கக்கூடியதாய் இருக்கும். சில நேரங்களில் நண்பர்களின் சில படங்கள் உங்களுக்குப் பிடித்திருக்கும். ஆனால் அவற்றை நண்பர்கள் எப்போதும் அழிக்காமலே வைத்திருப்பார் என்று சொல்ல முடியாது. ஆக நண்பரின் முழு அல்பத்தை அல்லது சில படங்களை அல்லது உங்கள் அல்பங்களை அல்லது தெரிவு செய்த படங்கள் சிலவற்றை தரவிறக்கிக் கொள்வது எப்படி? இதனை இலகுவாக செய்து முடிக்க இருக்கவே இருக்கிறது இணையத் தளம் ஒன்று.

தரவிறக்க சுட்டி:- http://www.picknzip.com/

முற்றிலும் இலவசமாக கிடைக்கும் pick & Zip ஐ பயன்படுத்தி படங்களை .zip அல்லது .pdf கோப்புகளாக தரவிறக்க முடியும்.

## 10 நிமிடம் மட்டும் செயற்படும் மின்னஞ்சல்

இணையத்தில் பல சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் ஆர்வங் காட்டும் போது, அவற்றைப் பெறுவதற்கு Sign up செய்கையில் எமது மின்னஞ்சல் முகவரியை வழங்குவது கட்டாயமாகிறது. இதனால், எமது மின்னஞ்சல் பெட்டிக்கு வகைதொகையின்றி எரிதங்கள் எனப்படும் SPAM வர வாய்ப்பேற்படுகிறது. இதனைத் தடுப்படுதற்காக, 10 நிமிடம் மட்டும் செயற்படும் தற்காலிகமான மின்னஞ்சல் முகவரியைத் தரும் ஒரு இணையத்தளமொன்று உள்ளது.

இதனைப் பெறுவதற்கு எந்தவித Form உம் நிரப்பவேண்டியதில்லை. அவ்விணையத்திலுள்ள இணைப்பை கிளிக் செய்ததும் எமக்குரிய மின்னஞ்சல் முகவரி தரப்படும். 10 நிமிடங்களுக்குள் அந்த முகவரிக்கு எந்த மின்னஞ்சல் வந்தாலும் அவற்றைப் பார்க்க முடியும். ஏன் பதிலும் அனுப்ப முடியும். 10 நிமிடம் போதாதென்றால் இன்னும் 10 நிமிடம் கூட்டியும் கேட்கலாம். ஆக தற்காலிக முகவரியை உருவாக்கி இணையச் சேவைகளைப் பெறுவதால், எமக்கு SPAM தொல்லை இருக்காது.


தரவிறக்க சுட்டி:- http://10minutemail.com


கணினி மூலை

## செப்டெம்பர் 11 ஹீரோயின்களாக

செப்டெம்பர் 11 தாக்குதலில் உயிரை பணயம் வைத்துப்போராடிய அமெரிக்க வீரர்களைக் கௌரவிக்கின்ற வகையில் பெட்டை நாய்களுக்கென பிரத்தியேக உடைகள் இம்முறை விற்பனை செய்யப் படுகின்றன.

இவ்வுடைகளை அணிவிக்கின்றவை மூலம் செப்டெம்பர் 11 தின ஹீரோயின்க ளாக இந்நாய்களை ஆக்கிக்கொள்ள முடியுமாம்.





இந்தியச் செய்திகள்

# எல்லோரும் ஏற்கும் வகையில் மசோதாவை நாடாளுமன்ற நிலைக்குழு பரிந்துரைக்கும்

(புதுடில்லி)

எல்லோரும் ஏற்கும்படியான லோக்பால் மசோதா உருவாக, நாடாளுமன்றக் குழு 3 மாதங்களுக்குள் பரிந்துரை அளிக்கும்' என குழுத் தலைவர் அபிஷேக் சிங்வி கூறியுள்ளார்.

அரசு தரப்பு லோக்பால் மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு நிலைக்குழுவுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதில் சில மாற்றங்களைச் செய்யும் அதிகாரம் நிலைக்குழுவுக்கு உள்ளது. இது பற்றி, குழுவின் தலைவர் அபிஷேக் சிங்வி அளித்த பேட்டியில் கூறியதாவது,

லோக்பால் மசோதாவின் நோக்கம் ஊழலை ஒழிப்பதுதான். இருதரப்பு மசோதாக்கள் ஒரே மாதிரியாக இல்லை என்றாலும், சாராம்சம் ஒன்றுதான். லேசான வேறுபாடுகள் உள்ளன. நாடாளுமன்ற விதிமுறைகளுக்கு அரசு கட்டுப்பட வேண்டியுள்ளதால், லேசான வேறுபாடுள்ளது.

நிறைவேற்றப் பட்ட மசோதா குறித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்ய நிலைக்குழுவுக்கு 3 மாதம் அவகாசம் உள்ளது. ஒருமுறை அல்லது இருமுறை நீடிப்பு செய்யாலாம். இருந்தாலும் எனது தலைமையிலான குழு, 3 மாதங்களுக்குள் லோக்பால் மசோதா மீதான பரிந்துரையை தாக்கல் செய்யும். இதற்கு காலக்கெடு விதித்தால் பிரச்னைக்கு தீர்வு ஏற்படாது.

எல்லோரும் ஏற்கும் வகையில் மசோதா உருவாக எங்கள் குழு பரிந்துரைக்கும். இவ்வாறு அபிஷேக் சிங்வி கூறியுள்ளார்.



லோக்பால் மசோதாவை நிறைவேற்ற வலியுறுத்தி அன்னா ஹசாரேயின் ஆதரவாளர்கள் பாற்கடலைக் கடைவதைப்போன்று போராட்டம் நடத்தினர்.

# அரசியல் பயத்தால் வந்தது வடிவேலுவின் தாராள மனம்



(சென்னை)

நடந்து முடிந்த தமிழக சட்டமன்ற தேர்தலில் தி.மு.கவுக்காக பிரச்சாரம் செய்தார் நடிகர் வடிவேலு. விஜயகாந்துக்கு எதிராகக் களமிறங்கிய அவரை சரியாகப் பயன்படுத்திக் கொண்டது தி.மு.க. புதிய அரசு பதவியேற்றதும் அவர் மீதான பழைய நில அபகரிப்பு வழக்கை தூசிதட்டி எடுத்தது. பதறிப்போன வடிவேலு தேர்தல்கால வீரவசனங்களை எல்லாம் விட்டுவிட்டு, பணம் கொடுத்து வாங்கிய நிலத்தை இலவசமாகத் திருப்பித்தந்துள்ளார்.

வடிவேலு மீது அசோக் நகரைச் சேர்ந்த ஓய்வுபெற்ற வங்கியாளர் பழனியப்பன் புகார் அளித்திருந்தார். போலி ஆவணங்கள் மூலம் ஏமாற்றி வாங்கிய தனது நிலத்தை நடிகர் சிங்கமுத்து, வடிவேலுக்கு விற்றுள்ளதாகவும், அந்த நிலத்தை இப்போது வடிவேலு தனது மகன் பெயரில் வைத்துள்ளார் என்றும் தனது புகாரில் கூறியிருந்தார்.

இந்தப் புகாரை இப்போதைய அ.தி.மு.க அரசு தூசிதட்டிக் கையிலெடுத்தது. இது தெரிந்ததும் வடிவேலு, பொலிஸாரின் விசாரணைக்கு முன்னரே, பாதிக்கப்பட்ட பழனியப்பனுக்கு நிலத்தை திருப்பிக் கொடுத்து விட்டார். எதற்கு வம்பு என்று நஷ்டத்தை பற்றி யோசிக்காமல் அந்த நிலத்தை திருப்பிக் கொடுத்துள்ளார் வடிவேலு.

சக சிரிப்பு நடிகரான சிங்கமுத்துவும், வடிவேலுவும் நீண்டகால நண்பர்கள். சிங்கமுத்து ரியல் எஸ்டேட் தொழில் செய்தும் வந்தார். பழனியப்பனின் நிலத்தை போலி ஆவணங்கள் மூலம் ஏமாற்றி வாங்கியது சிங்கமுத்து. அவரிடமிருந்தே வடிவேலு வாங்கியிருக்கிறார். வடிவேலுவுக்கும், சிங்கமுத்துவுக்கும் பிரச்சினை வந்தவுடன் வடிவேலு தி.மு.க உதவியை நாடினார். அவர்களுக்காக வீராவேசமான தேர்தல் பிரசாரமும் செய்தார்.

மாறாக, சிங்கமுத்து அ.தி.மு.கவுக்காக பிரச்சாரம் செய்ய இறங்கினார். இப்போது அதிமுக ஆட்சிக்கு வந்து விட்டதால் சிங்கமுத்து மீது நடவடிக்கை இல்லை. ஆனால் வடிவேலு மீது பொலிஸ் பாயும் என்பதால், நடவடிக்கைக்கு பயந்து நிலத்தை ஒப்படைத்திருகிறார் வடிவேலு. சொத்தின் ஆவணங்களை பரிசோதிக்காமல் வாங்கியது வடிவேலின் தவறுதான் என்றாலும். இதில் மோசடி செய்த சிங்கமுத்து தண்டிக்கப்படவில்லை. அதுதான் அரசியல்.

# அன்னா ஹசாரேயின் போராட்டத்துக்கு இரு காங்கிரஸ் எம்.பிக்கள் திடீர் ஆதரவு



(டெல்லி)

அன்னா ஹசாரேவின் போராட்டத்துக்கு பிரியா தத் மற்றும் சஞ்சய் நிருபம் ஆகிய இரு காங்கிரஸ் எம்.பிக்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இருவரும் மகாராஷ்டிராவைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பிரியா தத் பிரபல ஹிந்தி நடிகரான சஞ்சய் தத்தின் சகோதரி ஆவார்.

அன்னா ஹசாரேவின் ஊழல் எதிர்ப்புப் போராட்டத்திற்கு மும்பை, தமிழ்நாடு, ஆந்திரா உட்பட அனைத்துத் திரையுலகினரும் ஆதரவு தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், எம்.பிக்கள், அமைச்சர்கள் வீடுகளை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்துமாறு அன்னா ஹசாரே அழைப்பு விடுத்திருந்தார். அதை ஏற்று நேற்று எம்.பிக்கள், அமைச்சர்கள் வீடுகளை பல இடங்களில் அன்னா ஆதரவாளர்கள் முற்றுகையிட்டு அமைதி வழியில் போராடடம் நடத்தினர்.

மும்பை பந்த்ராவில் உள்ள பிரியா தத்தின் வீட்டுக்கும் 50 இற்கும் மேற்பட்டோர் சென்றனர். அவர்களிடையே பிரியாதத் பேசினார். அப்போது அவர் கூறுகையில் எல்லோரையும் போலவே நானும் வலுவான லோக்பால் மசோதாவை விரும்புகிறேன்.

நீதித்துறையும் அதில் சேர்க்கப்பட வேண்டும். பிரதமர் பதவியும் சேர்க்கப்பட வேண்டும். பிரதமருக்கே இதில் ஆட்சேபனை இல்லை என்று நான் கருதுகிறேன். ஊழலற்ற நாடாக இந்தியாவை மாற்ற வேண்டும் ஊழலுக்கு எதிரான இந்தியா அமைப்பின் கோரிக்கையை நானும் முழுமனதாக ஆதரிக்கிறேன், என்றார். இதைக் கேட்டதும் கூடியிருந்தவர்கள் பிரியாவின் பேச்சைக் கேட்டு கைதட்டி வரவேற்றனர்.

# 372 ஆவது பிறந்த நாளை கொண்டாடுகிறது சென்னை



(சென்னை)

இந்தியாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரமான சென்னைக்கு நேற்று (ஓகஸ்ட் 22) வயது 372 ஆகும். இந்தியாவின் நான்காவது பெரிய நகரான டெட்ராய்ட் சென்னை, 1639 ஆம் ஆண்டு இதே நாளில் சென்னப்ப நாயக்கரிடமிருந்து இந்த இடத்தை கிழக்கிந்தியக் கம்பனியின் வணிகர்கள் பிரான்ஸிஸ்டே மற்றும் அன்ட்ரூ கோகன் ஆகியோர் வணிகம் செய்வதற்காக வாங்கியதாகவும், கோட்டைக்கு வடக்கே உள்ள ஊர் 'சென்னப்பட்டினம்' என்று அழைக்கப்பட்டது என்பதும், சென்னப்பட்டினத்துக்குத் தெற்கே அமைந்திருந்த ஊர் மதராஸ் என்று அழைக்கப்பட்டது என்பதும் வரலாறு.

பின்னர், இந்த இரண்டு பட்டினங்களையும் இணைத்து மதராஸ் என்ற பெயரிலும், தமிழர்கள் சென்னப்பட்டினம் என்றும் அழைத்தனர்.

பின்பு ஒரு வருடம் கழித்து செயின்ட் ஜோர்ஜ் கோட்டை கட்டப்பட்டது. இங்கிருந்து ஆங்கிலேயர்கள் வணிகம் செய்து வந்தனர். கொஞ்சக்காலம் பிரெஞ்ச் கட்டுப்பாட்டிலும் மெட்ராஸ் இருந்திருக்கிறது.

ஆங்கிலேயர்கள் சென்னையைத் தலைமையிடமாக கொண்டு சென்னை மாகாணம் உருவாக்கினர். தற் போதைய தமிழ்நாட்டுடன் ஆந்திரா, கேரளா, கர்நாடகா மற்றும் ஒரிசாவில் இருந்து கொஞ்சம் சேர்த்தால் பழைய சென்னை மாகாணம் கிடைக்கும். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, மெட்ராஸ் மாநிலமாக உருவாக்கப்பட்டது.

1968 இல் மெட்ராஸ் மாநிலம் தமிழ்நாடு என்று பெயர் மாற்றப்பட்டது. 1996 இல் மெட்ராஸ் சென்னை என்று பெயர் மாற்றப்பட்டது.

372 வயதாகி விட்ட சென்னையின் வரலாற்றை மயிலாப்பூர், ஆழ்வார்ப்பேட்டை, எழும்பூர் என்று அடையாளப் படுத்தி ஒரு வார விழாவாகக் கொணடாட இருக்கிறது தமிழக அரசு.

இந்தியாவின் 4 ஆவது பெரிய நகரமாகவும், உலகில் உள்ள 35 பெரிய நகரங்களில் ஒன்றாகவும் சென்னை மாநகரம் விளங்குகிறது.

# தூக்குத் தண்டனைக் கைதிகளை விடுவிக்க முனைவாரா ஜெயலலிதா?

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மூவரின் உயிர்களைக் காப்பாற்றும் முயற்சியில், ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ, தமிழக முதலவர் ஜெயலலிதாவை நேரில் சந்திக்க அனுமதி கோரியுள்ளார் என்ற செய்தி ஏற்கனவே வெளியாகியிருந்தது.

அதே நேரத்தில், இந்தச் சந்திப்பு நடைபெறக்கூடாது என்று வேறு சில முயற்சிகள் நடைபெறுவதாகவும் தெரிய வருகின்றது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா, இலங்கை விவகாரத்தில் சமீப காலமாக குரலெழுப்பி வருகின்றார். அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் அனைத்தையும் கவனமாகப் பார்த்தால், அதில் ஒரு பொதுவான தன்மை இருப்பதை ஊடகங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

அது என்னவென்றால், அவர் குரலெழுப்புவது, இலங்கையில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் விடயத்தில் மாத்திரமே! அவரது எந்தக் கருத்துமே, புலிகளை ஆதரிக்கும் விதத்தில் இல்லை என்பதே.

தற்போது தூக்குத் தண்டனையை ரத்து செய்யப் போராடும் அமைப்புகள் தன்னை வந்து சந்திக்க அனுமதிக்காத வகையில் ஜெயலலிதா தரப்பில் சில முயற்சிகள் செய்யப்படுவதாக தமிழகப் பத்திரிகைகள் கூறுகின்றன.

இந்த விடயத்தில் குரல் எழுப்பும் அமைப்புகள், புலிகளின் தீவிர ஆதரவு அமைப்புகள் என்பதால், அவர்களது கோரிக்கைகளை மறுக்கும் விதமாகவும் சில ஊடகங்களில் பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட ஏற்பாடுகள் செய்யப்படுவதாகத் தெரியவருகின்றது.

தூக்குத் தண்டனை பெற்ற மூவரின் உயிர்களையும் காப்பாற்றும் முயற்சிகள் பற்றி, அடுத்து வரும் சில தினங்களில், ஊடகங்களில் வெளியாகப்போகும் செய்திகளைக் கவனித்துப் பார்த்தால் உண்மை புரியும்.

உலகச் செய்திகள்

# காயம் அடைந்த ஒசாமாவின் மனைவி சத்திரசிகிச்சை செய்துகொள்ள மறுப்பு!

(லண்டன்)

அமெரிக்கப் படைகள் சுட்டதில் காயம் அடைந்த ஒசாமா பின்லேடனின் மனைவி சத்திரசிகிச்சை செய்து கொள்ள தொடர்ந்து மறுத்து வருகிறார்.

பாகிஸ்தானின் அபோதாபாத் நகரில் பதுங்கி இருந்த அல்கொய்தா தீவிர வாதத் தலைவர் ஒசாமா பின்லேடனை, அமெரிக்க இராணுவத்தினர் சுட்டுக் கொன்றனர்.அப்போது ஒசாமாவைப் பாது காக்க ஓடிவந்த அவரது மனைவி அமல் அல் சதாவின் காலில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்தது. ஒசாமா கொல்லப்பட்ட பிறகு பாகிஸ்தானில் அமல் சிறை வைக்கப் பட்டுள்ளார். காலில் குண்டு பாய்ந்துள்ளதால் சத்திரசிகிச்சை செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் கூறிவருகின்றனர்.

இது குறித்து அமலின் சகோதரர் ஜகாரியா கூறுகையில், என் சகோதரியை சட்டவிரோதமாகச் சிறை வைத்துள்ளனர். சர்வதேச சட்டபடி அவரை விடுவிக்க மாட்டேன் என்று அமல் கூறியுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

# கனடா எதிர்க்கட்சித் தலைவர் புற்று நோயால் காலமானார்

(ஒட்டாவா)

கனடாவின் பிரதான எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சியின் தலைவர் ஜக் லெய்டன் காலமானார். அவருக்கு வயது 61. புற்றுநோய் காரணமாக நோய் வாய்ப்பட்டிருந்த அவர் கடந்த மாதம் எதிர்க்கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து தற்காலிகமாக விலகியிருந்தார்.

கடந்த மே மாதம் இடம்பெற்ற தேர்தலில் வெற்றி பெற்று, கனடா நாடாளுமன்றத்திற்கு முதன்முறையாக உறுப்பினராகத் தேர்வான இலங்கைத் தமிழரான ராதிகா சிற்சபேசன் இவருடைய புதிய ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்தான்.

கடந்த தேர்தலின் மூலம் கனடாவின் எதிர்க்கட்சியாக புதிய ஜனநாயகக் கட்சி தேர்வாகியிருந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

# 28 வயதில் பிடித்த ஆட்சியை 69 வயதில் இழந்தார் கடாபி



லிபிய ராணுவத்தில் வீரராக இருந்த கடாபி, துருக்கியில் சிகிச்சைக்கு லிபிய மன்னர் இட்ரிஸ் போயிருந்தபோது புரட்சி மூலம் 1969ல் ஆட்சியைக் கவிழ்த்தார்.

லிபிய அரபுக் குடியரசு என்று அறிவித்தார். முப்படைத் தளபதியாகவும், ஆளும் கவுன்சில் தலைவராகவும் ஆனார். ஏழைகளுக்கு அடிப்படை வாழ்க்கை வசதிகளை அளிப்பதாகக் கூறிய அவரது குடும்பம் கடந்த 42 ஆண்டுகளில் ஏராளமான சொத்துச் சேர்த்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த வருடம் பெப்ரவரியில் மக்கள கிளர்ச்சி தொடங்கியது. அதனால் 28 வயதில் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடித்த கடாபி அதே புரட்சிக்கு 69 வயதில் ஆட்சியை ஞாயிறன்று இழந்தார்.


42 ஆண்டுகள் ஆண்ட தலைவர் கடாபியின் அரசு வீழ்ந்தது. அவரது படையினர் தலைதெறிக்கத் தப்பி ஓடி மறைந்தனர். கடாபியைத் தேடும் பணி தீவிரமாக நடக்கிறது.

கடந்த 8 மாதமாக நீடித்த சண்டை, கடந்த சில நாட்களின் முன் தலைநகர் திரிபோலியை நெருங்கியது. அதை புரட்சிப் படையினர் சுற்றி வளைத்தனர். கடாபியின் மாளிகையைக் குறிவைத்து நேட்டோ படைகளும் வான்வழித் தாக்குதல் நடத்தின. அதில் மாளிகை இடிந்தது. ஞாயிற்றுக்கிழமை தீவிரமடைந்த தாக்குதலில் கடாபி ஆதரவுப் படையினர் பின்வாங்கி ஓடினர். மோதலில் பலர் கொல்லப்பட்டனர். எஞ்சியவர்கள் தப்பி தலைமறைவாகினர். இதையடுத்து, ஜனாதிபதி மாளிகையை புரட்சிப் படை யினர் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர்.

இந்த வெற்றியை லிபியா முழுவதும் கடாபி ஆட்சியில் விரக்தி கொண்டிருந்த மக்களும், புரட்சிப் படையினரும் இளைஞர்களும் கொண்டாடி வருகின்றனர். கடைசி கட்டத் தாக்குதலில் கடாபியின் 3மகன்கள் கைது செய்யப்பட்டனர். எனினும், கடாபியின் இருப்பிடம் பற்றிய தகவல் நேற்றிரவு வரை தெரியவில்லை. கடாபி வெளிநாட்டுக்குத் தப்பியிருக்கலாம் என்றும், பதுங்கு குழியில் லிபியாவிலேயே பதுங்கியிருக்கலாம் என்றும், இதய நோய்க்காக அவர் அடையாளம் தெரியாத நபராக மருத்துவமனை யில் சிகிச்சை பெறுவதாகவும் வெவ்வேறு தகவல்கள் தெரிவிக்கின்றன. திரிபோலியின் பொப் அல் அசிசியா என்ற தனது முப்படை மையத்தில் அவர் பதுங்கியிருக் கலாம் என்று பி.பி.சி செய்தி தெரிவித்தது.

- அமெரிக்கா போர்தொடுக்கும் என்ற அச்சத்தால் -

# அணு உலை மையங்களை பூமிக்கடியில் மாற்றிய ஈரான்




எந்த நேரத்திலும் அமெரிக்க போர்விமானங்கள் தாக்குதல் நடத்தலாம் என்பதால் தங்களது அணு ஆராய்ச்சி மையத்தை மலைகளுக்கு உள்ளே, பூமிக்கு அடியில் இடம் மாற்றிவிட்டதாக ஈரான் தெரிவித்துள்ளது. இதனால் ஈரானின் நோக்கம் குறித்த சந்தேகம் மேலும் வலுத்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மின்சார உற்பத்திக்காகவும், புற்று நோய்ச் சிகிச்சைககாகவும் அணு ஆராய்ச்சி மையங்களை அமைத்துள்ளதாகவும், அங்கு யுரேனியத்தை சுத்தப்படுத்தி வருவதாகவும் ஈரான் கூறுகிறது. ஆனால் அணுகுண்டு தயாரிக்கவே யுரேனியத்தைத் சுத்தப்படுத்தும் வேலைகளில் ஈரான் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்கா குற்றம்சாட்டி வருகிறது. ஈரானின் மையப்பகுதியில் உள்ள நடான்ஸ் மாகாணத்தில்தான் அணு ஆராய்ச்சி மையம் உள்ளது.

இந்த மையத்தின் மீது அமெரிக்காவும் இஸ்ரேலும் எந்தநேரமும் விமானத் தாககுதல்களை நடத்தலாம் என்ற அச்சம் உள்ளது. இந்த நிலையில் ஈரான் மிக ரகசியமாக தனது அணு ஆராய்ச்சி மையத்தை புனித நகரான குவாம் அருகே உள்ள போர்டோ என்ற இடத்தில் மலையைக் குடைந்து பூமிக்கு அடியில் மிகப் பாதுகாப்பான இடத்துக்கு இடம் மாற்றியுள்ளது. இநதத் தகவலை அணு ஆராய்ச்சி மையத்தின் தலைவருமான பெரெய்தோன் அப்பாசி உறுதிப்படுத்தியுள்ளார். தாக்குதல்களில் இருந்து மையத்தைக் காப்பாற்ற மிகுந்த பாடுபட்டு இந்த மையத்தை பூமிக்கடியில் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

# உலகின் மிகப் பெரிய குகை



போர்த்தொழில் விந்தைக்குப் புகழ் பெற்ற வியட்நாமில், அதிசயங்களுக்கும் பஞ்சம் இல்லை. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன், அங்கு உருவாக்கப்பட்ட குகை, தற்போது, பிரிட்டன் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அடர்ந்த வனப் பகுதியில், யாருடைய கண்களுக்கும் தட்டுப்படாத, இந்த அதிசய குகை, 4.5 கி.மீ., நீளமுடையது. உலகின் மிகப் பெரிய குகைப் பாதையாக, இது, அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் உயரம் 80 மீற்றர், அகலம் 80 மீற்றர். ஓங்கி உயர்ந்து நிற்கும் மலைகளைக் குடைந்து, இந்தக் குகை உருவாக்கப் பட்டுள்ளது. இந்தக் குகைக்குள், பல அதிசயங்கள் நிரம்பியுள்ளன. சலசலத்து ஓடும் சிறிய ஆறு, திரும்பும் பக்கம் எல்லாம் பச்சைப் போர்வை போர்த்தியது போல் காணப்படும் புல்வெளிகள், அடர்ந்த மரங்கள், பேரிரைச்சலுடன் விழும் அருவி என, இந்தக் குகையின் அழகு பரவசப்படுத்துகிறது.

இருபது ஆண்டுகளுக்கு முன்பே உள்ளூர்வாசி ஒருவர், இந்தக் குகையின் நுழைவாயிலைக் கண்டுபிடித்துள்ளார். உள்ளே நுழைய முயற்சித்த போது, குகைக்குள் இருந்து வந்த மர்ம ஒலியைக் கேட்டு பயந்து ஓடி வந்து விட்டார். இதற்குப் பின், யாருமே அந்த குகை இருக்கும் பக்கம் போவது இல்லை. தற்போது பிரிட்டன் ஆராய்ச்சியாளர்கள், இந்த குகையின் முழு விவரத்தையும், உலகின் பார்வைக்கு கொண்டு வந்துள்ளனர்.

# சுனாமியையும் சமாளிக்கும் ஜப்பான்



சமீபத்தில், ஜப்பானில் ஏற்பட்ட நில நடுக்கமும், சுனாமியும், அந்நாட்டுப் பொருளாதாரத்தையே சீர்குலைத்து விட்டது. அணு மின் நிலையங்களுக்குள் கடல் நீர் புகுந்ததால், அங்கிருந்து கதிர் வீச்சுப் பரவி, சுற்றுச் சூழலுக்கு பெரும் கேட்டை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. இதன் காரணமாக, அங்கு கடுமையான மின் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

இதுபோன்ற விஷயங்களில், மற்ற நாடுகளுக்கு எப்போதுமே முன் மாதிரியாகச் செயற்படும் ஜப்பானியர்கள், இந்த விஷயத்திலும் அந்தப் போக்கைப் பின் பற்றத் தொடங்கி விட்டனர்.

சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையிலும், மின்சாரத்தைச் சேமிக்கும் வகையிலுமான நடவடிக்கைகளில், தீவிரமாக இறங்கியுள்ளனர். இதன் ஒரு பகுதியாக, அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் குளிர்சாதன வசதிப் பயன்பாட்டை குறைத்துக் கொள்ள முடிவு செய்துள்ளனர்.

குளிர்சாதன வசதி இல்லாத நேரத்தில், எப்படி இருப்பது என்பதற்கும், சில ஆலோசனைகளை ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது. அலுவலகங்களில் வேலை பார்க்கும் ஊழியர்கள், சுற்றுச் சூழலுக்குப் பாதுகாப்பான, காற்றோட்டமான உடை களை அணிந்து வரும்படி, அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இறுக்கம் இல்லாத ரீ-ஷேர்ட், ஜீன்ஸ் போன்ற உடைகளை அணிந்து வருவதற்கு ஊழியர்களுக்கு அனு மதி அளிக்கப்பட்டுள்ளது.

கழுத்தில், 'டை' அணிந்து வருவதைத் தவிர்க்கும்படியும் அறிவுறுத்தப் பட்டுள்ளது. பெண் ஊழியர்கள், கால்களை முழுவதும் மறைக்கும் வகையிலான, ஹஷுக்களை அணிய வேண்டாம் என்றும், சாதாரண செருப்பு மற்றும் ஷுக்களை அணிந்து வரும்படியும் கூறப்பட்டுள்ளது. இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, விசேட நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது.

இதுபோன்ற நடவடிக்கைகள் மூலம், 15 சதவீத மின்சாரத்தைச் சேமிக்க முடியும் என்கின்றனர், ஜப்பான் அதிகாரிகள். தங்கள் மீது அணுகுண்டு வீசப்பட்ட போதே, அசராமல் எழுந்து நின்று, சாதித்துக் காட்டிய தன்னம்பிக்கை மிக்கவர்கள் ஜப்பானியர்கள். அவர்களை இந்த சுனாமி என்ன செய்து விடும்?

# ஃபேஸ்புக்




ஃபேஸ்புக் சமூக வலையமைப்பு இணையத்தளத்தை உருவாக்கியதில் மிக வும் முக்கியமானவர் மார்க் ஜுக்கர் பெர்க் (Mark Zuckerberg). இவர் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது உருவாக்கிய அமைப்பு ஃபேஸ்புக். இதன் பின்னணியில் ஒரு சுவையான விஷயம். பல ஓவியங்களைப் பற்றி அலச வேண்டிய ஒரு பணி (assignment) இருந்ததாம். மார்க் தனக்குத் தெரிந்த சில ஓவியங்களைப் பற்றிய கருத்துக்களை ஃபேஸ்புக்கின் சுவர்ப் பக்கத்தில் எழுதினாராம். அதைப் பார்த்த அவருடைய நண்பர்கள், 'இது சரியில்லை, இதைப் பற்றி மேலும் சில விஷயங்களை விட்டு விட்டீர்கள், இதை விட்டு விட்டீர்கள்' என்று எழுதித் தள்ளினார்கள். மார்க்கின் சமர்ப்பிப்பைப் பார்த்து அசந்து விட்டாராம் அவரது பேராசிரியர். எவ்வளவுதான் புத்திசாலியாக இருந்தாலும் ஒரு குழுவின் அறிவு, வீச்சு, தனிநபரை விட சக்தி வாய்ந்தது என்று புரிய வைத்தது இந்தச் சம்பவம். இதற்குப் பின், இன்னும் சில பல்கலைக்கழகங்களை இந்த அமைப்பில் இணைத்துப் பார்த்ததில், மார்க்குக்கு பல வித ஆச்சரியங்கள் காத்திருந்தன. அவர் நினைத்துப் பார்க்காத துறைகளில் எல்லாம் மாணவர்கள் அசத்தித் தள்ளினார்கள்.

மார்க்கிடம் சமீபத்தில் ஒரு பேட்டியில் இந்தச் சமூக வலையமைப்பு மென்பொருளை உருவாக்க வேண்டும் என்று எப்படித் தோன்றியது என்று கேட்டதற்கு இவர் அளித்த பதில் வித்தியாசமானது. 'சமூக வலையமைப்புகள் எதையும் நான் உருவாக்கவில்லை. அவை ஏற்கனவே உள்ளன. நான் உருவாக்கிய மென்பொருள் வலையமைப்புகளை மீண்டும் உயிர்பெறச் செய்துள்ளது, அவ்வளவுதான்!' என்றார். மிகவும் சரியான மதிப்பீடு. ஃபேஸ்புக்கில் நம்மைத் தெரிந்தவர்களுடன்தான் மீண்டும் தொடர்பு வைத்துக் கொள்கிறோம். விட்டுப்போன கல்லூரி நண்பர்கள், பழைய அலுவலக நண்பர்கள், உறவினர்கள், ஒரே இரசனையுடையவர்கள் என்று சேர்ந்து கொண்டு பல எண்ணங்களைப் பரிமாற்றிக் கொள்கிறோம், விவாதிக்கிறோம். அதற்கு ஃபேஸ்புக் மற்றும் டுவிட்டர் வழிவகுக்கிறது.

# பள்ளிவாசல்களின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு கோத்தாபய உத்தரவு

(கொழும்பு)

பள்ளிவாசல்களின் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். ரமழான் நோன்பை முன்னிட்டு இரவு நேரத்தொழுகையில் ஈடுபடும் முஸ்லிம்களின் நலன்கருதியே பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு அவர் உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


முஸ்லிம் அமைப்புகள் சிலவற்றின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம் இது



குறித்த பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ கலந்துரையாடியுள்ளார். கிழக்குப் பகுதியில் உள்ள பள்ளிவாசல்களின் நிர்வாகிகளுடன் சிறப்புக் கலந்தரையாடல் ஒன்றை அவர் நடத்தவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மகர சிறைச்சாலையில் உள்ள பள்ளிவாசல் ஒன்றும் சேதமாக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி பணித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## தண்ணீரில் இயங்கும் கார் இலங்கை இளைஞர் சாதனை



(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தண்ணீரில் இயங்கக் கூடிய கார் ஒன்றை வடிவமைத்துள்ளார். மூன்று லீற்றர் தண்ணீரைப் பயன்படுத்தி காரில் பயணம் செய்து அவர் சாதனை படைத்துள்ளார்.

தென்பகுதியைச் சேர்ந்த துஷார ஹெதிரிசிங்க என்பவரே இதனை வடிவமைத்துள்ளார். இவரது தொழில் நுட்பத்தை வாங்குவதற்கு வெளிநாட்டு நிறுவனங்கள் போட்டி போட்டு முயற்சி செய்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. அயினும் இந்தத் தொழில் நுட்பத்தை அவர் தனது தாய்நாட்டிற்குச் சமர்ப்பிக்க எண்ணியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புத்தளம் சம்பவத்தை விசாரிக்க நான்கு பொலிஸ் குழுக்கள் நியமனம்

(புத்தளம்)

புத்தளத்தைத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் குறித்து விசாரிக்க நான்கு பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பிரதேச பிரதிப்பொலிஸ் மா அதிபர் ரவி விநேகுணவர்த்தன தொவித்துள்ளார். புத்தளம் பகுதியில் ஏற்பட்ட அமைதியின்மையைக் கட்டுப்படுத்தத் சென்ற போது பிரதேசவாசிகளின் தாக்கு தலில் உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிளின் பூதவுடலுக்கு இறுதி மரியாதை செலுத்துவதற்காக சென்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


இந்தக் கொலையுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கு பொலிஸாருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறு பொதுமக்களிடமும், மதத் தலைவர்களிடமும் அவர் வலியுறுத்தினார். சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விரிவான விசாரணைகள் இடம்பெற்று வருகின்றது. சம்பவம் தொடர்பாக சில முக்கிய தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன. மூன்று பொலிஸ் குழுக்களும் இரகசியப் பொலிஸாரின்



விசேட குழுவொன்றும் இது தொடர்பான விசாரணைகளில் ஈடுபட்டுள்ளது இந்தச் சம்பவத்தில் புத்தளம் பொலிஸின் போக்குவரத்துப் பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிலான நொச்சியகம, ராஜாங்கனைப் பகுதியைச் சேர்ந்த டபிள்யூ.நவரத்ன பண்டார என்பவரே உயிரிழந்தார். என அவர் தெரிவித்தார்.

---

# நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு



## தினமுரசு நாளிதழ் நடத்தும் மாபெரும் பொது அறிவுப் போட்டி

**பங்குபற்றுங்கள்! பரிசுகளை அள்ளுங்கள்**

1. பொதுவாக ஒருவரின் சொந்த நாட்டை தாய்நாடு என்றே அழைப்பர். ஆனால் அதை 'தந்தையர் நாடு' என அழைத்தவர் யார்?
1) திருவள்ளுவர் 2) பாரதியார்
3) பாரதிதாசன் 4) நீலாவணன்

2. ஈழத்தில் 'மஹாகவி' என்ற புகழ்பெற்ற தமிழ்க் கவிஞரின் இயற்பெயர் என்ன?
1) சின்னத்துரை 2) சுப்பிரமணியம்
3) உருத்திரமூர்த்தி 4) சோமசுந்தரம்

3. தமிழ் செம்மொழி மாநாட்டு பாடலை எழுதியவர் யார்? அதற்கு இசையமைத்தவர் யார்?
1) சுந்தரம்பிள்ளை, எம்.எஸ்.விஸ்வநாதன்
2) அண்ணாத்துரை, எம்.பி.சீனுவாசன்
3) பாரதிதாசன், இளையராஜா
4) கருணாநிதி, ஏ.ஆர்.ரஹ்மான்

4. மல்லிகை பத்திரிகை ஆசிரியர் யார்? அவர் எழுதிய எந்த நூலுக்கு சிறிலங்கா சாகித்திய மண்டல விருது கிடைத்தது?
1) டொமினிக் ஜீவா, தண்ணீரும் கண்ணீரும்
2) ஞானசேகரம், குருதிமலை
3) தெளிவத்தை ஜோசப், காலங்கள் சாவதில்லை
4) செ. கணேசலிங்கன், சடங்கு

5. தங்கத் தாத்தா என அழைக்கப்பட்ட ஈழத்து கவிஞர் யார்?
1) விபுலானந்தர் 2) குமாரசாமிப் புலவர்
3) சோமசுந்தரப் புலவர் 3) ஆறுமுக நாவலர்

6. பன்னிரு திருமுறைகள் எத்தனையாம் நூற்றாண்டில் எந்த மன்னனின் ஆட்சியில் தொகுக்கப்பட்டது?
1) 10 ஆம் நூற்றாண்டு, ராஜராஜசோழ்ன்
2) 07 ஆம் நூற்றாண்டு, மகேந்திர பல்லவன்
3) 14 ஆம் நூற்றாண்டு, குலசேகர பாண்டியன்
4) 16 ஆம் நூற்றாண்டு, கிருஷ்ண தேவராயர்

7. ஆறுமுகநாவலர் அவர்கள் யாருடைய வேண்டுதலின் பெயரில் 'பைபிளை' தமிழில் மொழிபெயர்த்தார்.
1) சி.வை.தாமோதரம்பிள்ளை
2) தாவீது அடிகளார்
3) பீற்றர் பேர்சிவல் பாதிரியார்
4) மவுண்ட்பேட்டன் பிரபு

8. இசைப்பாடல்களால் அமைந்த வேதம் எது?
1) இருக்கு 2) யசுர்
3) சாமம் 4) அதர்வணம்

9. பத்தாம் திருமுறை எது? அதனை எழுதியவர் யார்?
1) தேவாரம், திருநாவுக்கரசர்
2) கந்தபுராணம், கச்சியப்பர்
3) திருப்புராணம், சேக்கிழார்
4) திருமந்திரம், திருமூலர்

10. அபிராமி அந்தாதியை எழுதியவர் யார்?
1) சோமசுந்தரப் புலவர் 2) சக்திமுற்றப் புலவர்
3) எஸ்.வி.சுப்பையா 4) அபிராமிப்பட்டர்

11. திருக்கோணேஸ்வரப் பதிகம் யாரால் பாடப்பட்டது?
1) திருஞானசம்பந்தர் 2) சுந்தரமூர்த்திநாயனார்
3) கோணேசநாதர் 4) இராவணேசன்

12. 'கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்' என்ற கீர்த்தனையை எழுதியவர் யார்?
1) முத்துசுவாமி தீட்சிதர் 2) அருணாசலக் கவிராயர்
3) வீரமணி ஐயர் 4) இராமலிங்க வள்ளலார்

13. 'மருணீக்கியார்' என்ற பெயரைக் கொண்டிருந்த சமயகுரவர் யார்?
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) மாணிக்கவாசகர் 4) சுந்தரமூர்த்தி நாயனார்

14. இணையற்ற விஞ்ஞானி ஆல்பர்ட் ஜன்ஸ்டீன் கண்டு பிடித்த புகழ்பெற்ற கோட்பாட்டின் பெயர் என்ன?
1) வானவியல் கோட்பாடு 2) சார்பியல் கோட்பாடு
3) அளவையியல் கோட்பாடு 4) காந்தவியல் கோட்பாடு

15. 'சினிமா என் சாதனை, வீணை என் ஆராதனை' எனக் குறிப்பிட்ட திரைப்பட இயக்குநரான இசை மேதை யார்?
1) ஜி.என்.பாலசுப்பிரமணியம் 2) ரவிசங்கர்
3) கே.எஸ்.கோபாலகிருஷ்ணன் 4) எஸ்.பாலச்சந்தர்

16. 'லயஞான குபேர பூபதி' பட்டம் பெற்ற தவில் வாத்திய மேதை யார்?
1) வலயப்பட்டி சண்முகசுந்தரம் 2) நடராஜசுந்தரம்
3) தட்சணாமூர்த்தி 4) இணுவில் சின்னராசா

17. யாழ்ப்பாணத்தில் "கலைமகள் சரஸ்வதிக்கு" ஒரு சிறு கோவில் உண்டு. அது அமைந்துள்ள இடம் எது?
1) கீரிமலை 2) கொக்குவில்
3) நல்லூர் 4) அரியாலை

18. அதிகளவில் பக்திப் படங்களை இயக்கி அருட் செல்வர் என்ற பட்டம் பெற்ற இயக்குநர் யார்?
1) கே.பாலச்சந்தர் 2) இராம நாராயணன்
3) பி.மாதவன் 4) ஏ.பி.நாகராஜன்

19. நாரதர், அகத்தியர், இராவணன் மூவரும் ஒரு கலையில் வல்லவர்கள் அக்கலை எது?
1) நாட்டியக்கலை 2) இசைக்கலை
3) சிற்பக்கலை 4) மந்திரக்கலை

20. தினமுரசு தினப்பத்திரிகையாக எப்போதிருந்து வெளிவரத் தொடங்கியது?
1) 2002 ஐப்பசி 01 ஆம் திகதி
2) 2010 ஐப்பசி 01 ஆம் திகதி
3) 1990 மாசி 19 ஆம் திகதி
4) 1993 தை 01 ஆம் திகதி

### நிபந்தனைகள்

- 20 வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும்.
- ஒவ்வொரு கேள்வியின் கீழும் தரப்பட்டிருக்கும் நான்கு விடைகளில் சரியான விடையின் கீழ் கீறிட வேண்டும்.
- தினமுரசு நாளிதழில் உள்ள இந்தப் படிவத்திலேயே சரியான விடைகளின் கீழ் கீறிட்டு, படிவத்தைக் கத்தரித்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
- வேறு தாள்களில் எழுதி அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டாது.
- விடைகள் யாவும் இல.373, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் அலுவலகத்திலும் அல்லது நல்லூரில் . திருவிழாக் காலத்தில் அமைந்திருக்கும் எமது அலுவலகப் பந்தல்களிலும் ஒப்படைக்கலாம்.
- விடைகள் கிடைக்க வேண்டிய கடைசித் திகதி **27.08.2011**
- போட்டி முடிவுகள் நல்லூர்த் **தீர்த்தத்திருவிழா** அன்று அறிவிககப்படும். அன்றைய 'தினமுரசு' நாளிதழில் வெளியிடப்படும். பரிசில்கள் பூங்காவனத் திருவிழா (29.08.2011) அன்று வழங்கப்படும்.
- போட்டி தொடர்பான தனிப்பட்ட கடிதத் தொடர்புகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தினமுரசு குடும்பத்தின் ஊழியர்கள் எவரும் போட்டியில் பங்குபற்ற முடியாது.
- தகைமை சார்ந்த தேர்வாளர்களின் தீர்ப்பே இறுதிமுடிவாகும்.

பெயர் : ....................................................

முகவரி : ....................................................

....................................................

தொ.பேசி இலக்கம்: .............................. ..............................

கையொப்பம்

# இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண என்னால் மட்டுமே முடியும்

## பாணம் விடுகிறார் சுப்ரமணியசுவாமி



(கொழும்பு)

இலங்கையின் இனப்பிரச்சினையை தன்னால் மாத்திரமே தீர்த்து வைக்க முடியும் என இந்தியாவின் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்ரமணிய சுவாமி கூறியுள்ளார்.

சுப்ரமணிய சுவாமி திருவாரூரில் செய்தியாளர்களைச் சந்தித்த போதே இவ்வாறு கூறியுள்ளார். அப்போது அவர், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை என்னால் மட்டும்தான் தீர்த்து வைக்க முடியும். ஆனால் வைகோ, நெடுமாறன், சீமான் உள்ளிட்டவர்கள் தாங்கள் தோற்று விட்டதாக ஒப்புக்கொள்ள வேண்டும்.

அவ்வாறு ஒப்புக்கொண்டால் நான் இலங்கை அதிபரை சந்திப்பேன். இல்லையென்றால் நான் செய்த பிறகு இவர்கள் செய்ததாக கூறுவார்கள். ஏற்கனவே முல்லை பெரியாறு பிரச்சினையில் 6 ஆண்டுகள் வழக்கு நடத்தி நீர்மட்டத்தை உயர்த்தச் செய்தேன்.

ஆனால், இவர்கள் செய்ததாக சொல்லிக்கொண்டார்கள். எனவே இவர்கள் தோற்று விட்டதாக ஒப்புக்கொண்டால் நான் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை தீர்த்து வைக்கிறேன் என்று கூறினார்.




யாழ். சுகவாழ்வு நிறுவனத்தினால் நேற்றைய தினம் நிறுவன மண்டபத்தில் சிறுவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட சிறார்கள், வளவாளர்கள் மற்றும் இயக்குநர் ஆகியோரைக் காணலாம். (52)

# துரித விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

ஈ நியுஸ் ஊடகவியலாளர் பிரகீத் எகனெலிகொட காணாமல் போனமை குறித்து விசாரணை நடத்தி அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு ஹோமாகம நீதவானுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வியடம் தொடர்பாக எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்கெலிகொடவும் இரண்டு பிள்ளைகளும் தாக்கல் செய்த ஆட்கொனர்வு மனுவை ஆராய்ந்த பின்னரே மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவை வழங்கியது.

இது குறித்த மனு மற்றும் ஆவணங்களைப் பெற்றுக் கொண்டு விசாரணை நடத்தப்பட வேண்டும் என டபிள்யூ.எல். ரன்ஜித் சில்வா, டீ.எஸ்.சீ லேகம்வசம் ஆகிய நீதிபதிகள் குழு ஹோமாகம நீதவானுக்கு இன்று அறிவித்தது.குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஹோமாகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப் பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்துடன் பிரதிவாதிகள் தொடர்புள்ளதாக மனுவில் குறிப்பிடவில்லை என்பதால் அவர்களை விடுவிக்குமாறு பிரதிவததிகள் சார்பாக ஆஜரான அரச தரப்பு சட்டத்தரணி சமிந்திர விக்ரம நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

# நாட்டின் நிலைமைகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சில் கலந்தாராய்வு

(கொழும்பு)

கிறிஸ் பேய் தொடர்பான சர்ச்சை ஏற்பட்ட சகல பிரதேசங்களினதும் உயர் பாதுகாப்பு அதிகாரிகள் கொழும்பிற்கு அழைக்கப்பட்டு பாதுகாப்புச் செயலாளர் கோதபாய ராஜபக்ஷ கலந்து ஆலோசனை நடாத்தினார்.

பாதுகாப்புப் படையினரே கிறிஸ் பேய்களாக மாற்றமடைந்துள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் கிடையாது எனத் தெரிவித்த அவர், இவ்வாறான நிலைமைகளில் சட்டத்தை கையிலெடுக்க எவருக்கும் அனுமதியில்லை அவ்வாறு எடுப்பவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் அறிவித்துள்ளார்.

மேலும் பதற்ற நிலைமைகளை எவ்வாறு தடுப்பது என்பது குறித்தும் பாதுகாப்புச் செயலாளர் அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

## நாவாந்துறை சம்பவம்...

இருளின் துணையுடன் தன்னை அடையாளம் காட்டாமல் நாவாந்துறை குடியிருப்புப் பகுதிக்குள் நுழைந்த நபர் ஒருவரைத் துரத்திச்சென்ற கிராமவாசிகள் சிலர் குறித்த நபர் படையினரின் காவலரணுக்குள் நுழைந்ததை அவதானித்துள்ளனர். இதனால் துரத்திச்சென்றவர்கள் படையினருடன் வாய்த் தர்க்கத்தில் ஈடுபட்டனர். இதுவே இக்களேபரத்தின் தொடக்கப் புள்ளியாகியது.

பொதுமக்களைக் கட்டுப்படுத்த பொலிஸார் இரு வாகனங்களில் ஸ்தலத்துக்கு விரைந்தனர். ஏற்கனவே வீதிகளில் பரபரப்புடன் காணப்பட்ட பொதுமக்கள் பொலிஸார் மீது கையில் அகப்பட்ட கற்களாலும் பொல்லுகளாலும் தாக்கத் தொடங்கினர். பொலிஸாரின் இரு வாகனங்களும் அடித்து நொருக்கப்பட்டன. திணறிப்போன பொலிஸாருக்கு உதவுவதற்காக சிறிது நேரத்தில் இராணுவத்தினரும் மேலதிக பொலிஸாரும் களமிறங்கினர்.

கிராமத்துக்குள் நுழைந்த படையினரும் பொலிஸாரும் வீடு வீடாகச் சென்று பொதுமக்கள் மீது சகட்டுமேனிக்கு தாக்குதலை நடத்தியதாக காயமடைந்த பொதுமக்கள் தெரிவித்தனர். தாக்கப்பட்டவர்கள் இழுத்துச் செல்லப்பட்டு வாகனங்களில் ஏற்றப்பட்டு யாழ். பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

கிராமம் முழுவதும் அழுகுரல்களும் அலறல் சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன. பொதுமக்கள் அங்குமிங்கும் ஓடித்திரிந்தனர். நாய்கள் வீதிகளில் குரைத்த வண்ணமிருந்தன. மொத்தத்தில் இக்கிராமம் முழுவதும் அதிகாலை வரை களேபரமாகக் காட்சியளித்தது.

படையினர் கைதுசெய்த அனைவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதாக நேற்று விடிகாலைப் பொழுதில் தகவல் கசியத் தொடங்கியதும் கிராம மக்களில் அநேகமானவர்கள் யாழ். நீதிமன்றத்தின் முன்னால் திரண்டனர். இதனால் நாவாந்துறைக் கிராமம் வெறிச்சோடிக் காணப்பட்டது. கடைகள், சந்தை என்பன இயங்கவில்லை. கடல்தொழிலுக்கு எவரும் செல்லவில்லை. யாழ். வைத்தியசாலையிலும் பெருமளவு மக்கள் கூடிநின்றனர். கைது செய்யப்பட்ட அனைவரையும் உடன் விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து யாழ். நீதிமன்றத்தின் முன்னால் திரண்ட நாவாந்துறை மக்கள் கலைந்துசெல்ல மறுத்து நேற்று முன்னிரவு வரை அங்கேயே தரித்து நின்றனர்.

அதேவேளை நாவாந்துறைக் கிராமத்திற்கு மேலதிக படையணிகள் வரவழைக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது. வீதிகள், சந்திகள் தோறும் படையினர் காவல் கடமையில் ஈடுபட்டிருக்கின்றனர். நேற்று பின்னிரவு மேலும் மேலும் வாகனங்கள் மூலம் படையினர் இப்பகுதியில் குவிக்கப்பட்டிருக்கின்றனர். இதனால் இப்பகுதி மக்கள் நேற்று இரவையும் பதற்றத்துடன் கழித்தனர்.

அதேவேளை இச்சம்பவம் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நேற்று மாலை யாழ். கட்டளைத் தளபதி நடத்தினார். இச்சம்பவத்தின்போது சட்டத்தைக் கையில் எடுத்த அனைவருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் அங்கு வலியுறுத்தினார்.

# மர்ம நபர் வதந்தியுடன் கொள்ளையரும் நடமாட்டம்

(யாழ்ப்பாணம்)

மர்ம நபர் என்ற போர்வையில் கொள்ளையில் ஈடுபட்ட ஒருவர் கற்பிட்டியில் கைதுசெய்யப்பட்டார்.

கற்பிட்டி, ஏத்தாலை பிரதேசத்தில் பொதுமக்களை அச்சத்துக்கு உள்ளாக்கும் வகையில் உள்ளாடையுடன் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய சந்தேக நபர் ஒருவரை பிரதேச வாசிகள் மடக்கிப் பிடித்தனர்.

குறித்த நபர், தனது உடலில் எண்ணெய் பூசியிருந்ததாகவும் அவரைப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைப்பதில் பிரதேச வாசிகள் சிரமத்தை எதிர்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரிடமிருந்து 10,400 ரூபா பணமும், கையடக்கத் தொலைபேசியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபரிடம் தொடர்ந்தும் விசாரணைகளை பொலிஸார் நடத்தி வருகின்றனர்.

## தவறு...

இவ்வாறு அமைக்கப்படும் குழுக்களுக்கு தமது பூரண ஒத்துழைப்பு வழங்கப்படுமெனவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உறுதிமொழி வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நீல் தளுவத்த உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், மேலதிக அரச அதிபர், பிரதேச பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## அமைதியைக் குலைக்கும்....

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த 30 ஆண்டுகளாக நாட்டில் இடம்பெற்ற கொடிய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு தமிழ் சிங்கள மக்கள் அனைவரும் இயல்பாக வாழ்ந்துவரும் நிலையில் தற்செயலாக நடைபெற்ற இச்சம்பவம் வேதனையளிக்கிறது.

நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டிய பொறுப்பு பொலிஸாருக்குண்டு. சட்டத்துக்கு புறம்பான எச்செயலும் இடம்பெறுவதை நாம் அனுமதிக்கமாட்டோம். அதுமட்டுமல்லாமல் சட்டத்தை எவரும் கையில் எடுக்க விடமாட்டோம். நாவாந்துறையில் இடம்பெற்ற சம்பவம் சமாதானத்தை விரும்புகின்ற, ஜனநாயகத்தை விரும்பும் மக்கள் எவரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

உண்மையில் இந்தச் சம்பவம் ஒரு பயங்கரவாத செயற்பாடாகவே எமக்குத் தெரிகிறது. குறைந்தளவு இராணுவம் உள்ள முகாமொன்றில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தை அறிந்த பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து சென்றபோது அங்கு சுமார் 500 இற்கும் அதிகமான மக்கள் திரண்டு பொலிஸார் சென்ற 2 ஜீப் வண்டிகளை சேதப்படுத்தியதுடன், பொலிஸாருக்கும் காயம் விளைவித்துள்ளனர்.

இதனை அவதானிக்கும்போது இச்சம்பவம் ஏற்கனவே திட்டமிட்ட முறையில் அரசியல் பின்னணியில் நடைபெற்றுள்ளதாக ஊகிக்க முடிகிறது.


பொதுமக்களுக்கும் படையினருக்கும் இடையில் இதுவரை காலமும் எந்தவிதமான பிரச்சினை எப்போதும் ஏற்பட்டது கிடையாது. அரசியல் வாதிகளின் திட்டமிட்ட செயற்பாடொன்றின் பிரதிபலிப்பே நாவாந்துறைச் சம்பவமாகும்.

பொலிஸாரைத் தாக்கியவர்கள் சைக்கிள் செயின், மண்நிரப்பிய போத்தல்கள், ரியூப் பல்ப் ஆகியவற்றைப் பயன்படுத்தியிருந்தனர்.

இதிலிருந்து இத்தாக்குதல் சம்பவத்தை ஒரு திட்டமிட்ட சம்பவமாகவே நாம் கருதுகிறோம். எது எப்படியிருந்த போதிலும் சட்டத்துக்கு புறம்பான முறையில் வன்முறைச் சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்போம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## செய்திப்பாணம்

**சர்வாதிகாரம் நிலைத்ததா சர்வலோக மட்டத்தில்
கர்வத்தால் அழிவினைக் கண்டோம்- நிர்வாகத்தை
கட்டிப்பிடி கடாபியும் கடைசியில் துலைஞ்சார்
எட்டடிக் குழிதான் ஏது!**



# இளம் பெண் கடத்தல் முயற்சி பொதுமக்களால் முறியடிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பேருந்து நிலையத்துக்கு முன்னாள் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இளம்பெண்ணொருவரைக் கடதத முற்பட்ட சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

பேருந்து நிலையத்துக்கு அருகில் சென்று கொண்டிருந்த குறித்த இளம்பெண்ணைத் தொடர்ந்து, வெள்ளை நிற ஹயேஸ் வானில் வந்து கொண்டிருந்த சிலர் பலவந்தமாக அவருடைய கையைப் பிடித்து வானுக்குள் ஏற்ற முற்பட்டனர். அப்பெண் கத்திக் கூக்குரலிட்டதைக் கண்ட பொதுமக்கள் உடனே ஓடி வந்து காப்பாற்ற வந்ததாகவும், அதனை அவதானித்த நபர்கள் அவ்விடத்தை விட்டு வேகமாக ஓடிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (12)

# அரச வைத்தியசாலைகளில் தனியார் பரிசோதனை செல்லாது

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளில் உரிய மருத்துவ ஆய்வுக்கான வசதி காணப்படும் போது நோயாளியினை தனியார் வைத்தியசாலைகளில் ஆய்வுகளை மேற்கொள்ளுமாறு பணிக்க வேண்டாம் என வைத்தியர்களுக்கு சுகாதார அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இதன்படி, அரச வைத்திய சாலையில் காணப்படும் ஆய்வு கூடத்தினால் வழங்கப்படும் பரிசோதனை அறிக்கையினை மட்டுமே அரச வைத்தியசாலைகளில் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# 65 ஆயிரம் ஏக்கரில் வாழைச்செய்கை இலங்கையில் அமெரிக்கா விவசாய முயற்சி



(கொழும்பு)

இலங்கையில் 65 ஆயிரம் ஏக்கர் காணியை அமெரிக்காவிற்கு நீண்டகால குத்தகைக்கு வாழைப்பழ செய்கைக்காக கொடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சோமாவதி பூங்கா, கந்தளாய், லுனுகம்வெஹெர, புத்தல ஆகிய பிரதேசங்களிலுள்ள 65,500 ஏக்கர் நிலப்பரப்பு காணிகளை இவ்வாறு வெளிநாட்டு நிறுவனத்திற்கு வழங்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளது.

கந்தளாய் பிரதேசத்தில் 15 ஆயிரம் ஏக்கர் காணியும், சோமாவதி தேசிய பூங்காவின் கந்தகடுவ பிரதேசத்திலுள்ள 11 ஆயிரம் ஏக்கர் காணியும், லுனுகம் வெஹர பிரதேசத்தில் 3 ஆயிரம் ஏக்கர் காணியும், புத்தல பிரதேசத்தில் 500 ஏக்கர் காணியும் இவ்வாறு அமெரிக்க நிறுவனத்திற்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

என்ன நிபந்தனையின் அடிப்படையில் 65,500 ஏக்கர் காணியை வாழைச் செய்கைக்காக அமெரிக்க நிறுவனமொன்றுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என சுற்றுபுறச் சூழல் அமைப்புக்கள் கேள்வியெழுப்பியுள்ளன.

எனினும், இதுதொடர்பாக தமக்கு எதுவும் அறிவிக்கப்படவில்லையென இலங்கை மத்திய சுற்றுப்புறச் சூழல் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

நாட்டில் முன்னெடுக்கப்படும் எந்தவொரு அபிவிருத்தித் திட்டமாக இருந்தாலும், அதனால் ஏற்படும் சூழல் பாதிப்பு குறித்து திட்டமிடும் அதிகாரம் சுற்றுப்புறச் சூழல் அதிகார சபைக்கே இருக்கிறது.

எனினும், அதிகார சபைக்கு அறிவிக்காது இவ்வாறு காணிக் கொள்ளையொன்று இடம்பெறுவது அநீதியான செயல் என சுற்றுப்புறச் சூழல் ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

# புத்தளத்தில் பொலிஸ் கொலை இதுவரை 37 பேர் கைதாகினர்

புத்தளம் பிரதேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற அமைதியற்ற சூழ் நிலையுடன் தொடர்புடையதான சந்தேகத்தின் பேரில் 37 பேர் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக வடமேல் மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் ரவி விஜே குணவர்தன தெரிவித்தார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில், பொலிஸ் கான்ஸ்டபிளான நவரத்ன பண்டாரவின் கொலையுடன் தொடர்புடையதான ஐவரும் உள்ளடங்குவதாகவும் பிரதி பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், புத்தளத்தில் பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையில் இடம் பெற்ற மோதல் சம்பவத்தில் பொலிஸ் கான்ஸ்ட்பிள் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையதான பிரதான சந்தேக நபர்கள் ஐவர் நேற்றுப் புத்தளம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, குறித்த மோதல் சம்பவத்தின் போது பொலிஸாரது மோட்டார் சைக்கிள்களை எரித்து சேதப்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், கற்பிட்டி, புத்தளம் பிரதான வீதியை மறித்து பொலிஸார் மீது நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை தாக்குதல் நடத்தினார்கள் என்ற சந்தேகத்தில் 10 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், கடந்த சனிக்கிழமை காலை, கற்பிட்டி பிரதேசத்தில் வைத்து பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியதுடன் வைத்திய சாலைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட அனைத்து சந்தேக நபர்களிடமும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## ஏமாற்றி அழைத்து; பொலிஸ் மீது தாக்குதல்

போலித் தகவல் வழங்கி பொலிஸாரை அழைத்த சிலர் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியுள்ள சம்பவம் நேற்று முன்தினம் காலி கிங்தொட்டப் பகுதியில் இடம்பெற்றது. இந்தத் தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் கான்ஸ்டபில் காலி கராப்பிட்டி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். கிங் தொட்ட பகுதியில் சந்தேகத்திற் கிடமான சிலர் இருப்பதாக பொலிஸ் அவசரப்பிரிவிற்கு கிடைக்கப்பெற்ற தகவலிற்கமைய அங்கு சென்ற சமயத்தில் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முன்னாள் கல்விப் பணிப்பாளர் வவுனியாவில் காலமானார்

(வவுனியா)


வவுனியாவில் நேற்று முன்தினம் காலமான ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றஞ்சனி ஒஸ்வோல்ட் காலமானார்.

சில காலம் புற்று நோய் காரணமாக சிகிச்சை பெற்று வந்த இவர் தனது 61 ஆவது வயதில் காலமானார்

வவுனியா, இறம்பைக் குளத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர்.

11 ஆண்டுகாலம் வலயக்கல்விப் பணிப்பாளராக சேவையாற்றிய பலருடைய பாராட்டுக்களை பெற்றவர். சில மாதங்களுக்கு முன்னரே ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# இருவருக்கு ஒரே இலக்கத்தில் தேசிய அடையாள அட்டை




இரட்டையர்கள் இருவருக்கு ஆள் அடையாள அட்டைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் இரண்டும் ஒரே இலக்கங்களைக் கொண்டனவாக அமைந்துள்ள சம்பவமொன்று ரம்புக்கன பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளது.

ஒரே இலக்கத்தைக் கொண்ட இரு அடையாள அட்டைகள் கடந்த 2010 ஆம் ஆண்டு செப்டெம்பர் 27ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளது.

பெலிகங்கானமலாகே மல்கி தேசானி சேனாநாயக்க மற்றும் பெலிகங்கானமலாகே தில்கி சேனாநாயக்க ஆகிய இருவருக்குமே இரு அடையாள அட்டைகளிலும் 938121770 V என்ற ஒரே இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் இந்த யுவதிகளின் தந்தை அடையாள அட்டைகள் திணைக்களத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தார். இதனையடுத்து அவர்களுக்கு ஒரே நாளில் புதிதாக இரு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. ஆனால், அவை இரண்டிலும் மீண்டும் ஏற்கனவே விநியோகிக்கப்பட்டது போல இருவரது தேசிய அடையாள அட்டைகளிலும் ஒரே இலக்கங்களே காணப்பட்டன.

# தங்கத்தின் விலை தொடர்ந்து உயர்கிறது

(கொழும்பு)

ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 1900 டொலரைத்தாண்டியுள்ளது. ஆசிய சந்தையில் 0.8 சதவீத்தினால் அதிகரித்துள்ளது. அவுன்ஸ் ஒன்றுக்கு 1,911 டொலராக தங்கத்தின் விலை அதிகரித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பியாவின் கடன் நெருக்கடிகள் தங்கத்தில் விலை அதிகரிப்புக்கு காரணம் என்று சொல்லப்படுகின்றது.

தங்கத்தின் விலை மேலும் அதிகரிக்கலாம் என்று பகுப்பாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.


பங்குச் சந்தை முதலீடு வீழ்ச்சியடைந்து வரும் இக் காலத்தில் தங்கம் பாதுகாப்பான சேமிப்பு என்று முதலீட்டாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர் என்று அவுஸ்திரேலியாவின் இன் வெஸ்ட்டெக் நிறுவனத்தின் இயக்குனர் டாரன் ஹீத்தோட் தெரிவித்தார்.

அமெரிக்காவின் சமஷ்டி ரிசேர்வ் பொருளாதாரத்தை உயர்த்துவது தொடர்பான ஊக்குவிப்பு நடவடிக்கைகளை எடுக்கலாம் என எதிர்ப்பார்க்கப்படும் தருணத்தில் தங்கத்திற்கான மதிப்பு மேலும் உயரலாம் என்று



ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். உலகில் உள்ள மத்திய வங்கியின் ஆளுநர்கள் இவ் வாரம் ஜாக்டஸன் ஹோல் வருடாந்த உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

**யாழ்.நாவாந்துறை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு மர்ம மனிதர்கள் வந்ததாக ஏற்பட்டபதற்ற சூழலால் தாக்குதலுக்குள்ளான 98 பேர் காயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். அவாகளை நேரில் சென்று சந்தித்து பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆறுதல் கூறினார். அத்துடன் இவ்வாறான சம்பவங்கள் உடன் தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்றும் இது தொடர இடமளிக்க முடியாதென்றும் குறிப்பிட்டார்.**





இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 ஓகஸ்ட் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.